இராசராசசோழன் வரலாற்றுக்கூடம்

தஞ்சாவூர்

கையேடு

1360

V21193:71
808
228750

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
சென்னை

இராசராசசோழன் வரலாற்றுக் கூடம்

தஞ்சாவூர் (கையேடு)

பதிப்பாசிரியர்

முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப.

ஆணையர்

ஆசிரியர்கள்

ச. செல்வராஜ்

கோ. அர்ச்சுணன்

தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு, சென்னை- 8

2008

முதற்பதிப்பு : 2008

வெளியீட்டு எண் : 202

© தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை

நூலின் பெயர் : இராசராசசோழன் வரலாற்றுக் கூடம்
தஞ்சாவூர் (கையேடு)

பொதுப் பதிப்பாசிரியர் :
முனைவர் க. அருள்மொழி, இ.ஆ.ப.

ஆசிரியர்கள் :
திரு. ச. செல்வராஜ்
திரு. கோ.அர்ச்சுனன்

228750
V21193:71

விலை : Rs 45=00

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை - 8.

முனைவர் **க. அருள்மொழி,** இ.ஆ.ப.
ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.
தொ.பே/நிகரி:91-44-28190023
e-mail : tnarch@tn.nic.in

பதிப்புரை

சோழ மன்னர்களின் வரலாறு, கலை, அரசியல், திருக்கோயில் திருத்தொண்டு ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வண்ணம் சோழர் கலைமரபுக் (Chola Art Heritage Museum) கூடம் என்ற வகையில் இராஜராஜசோழன் அகழ்வைப்பகம் அமைக்கப் பெற்றுள்ளது.

இவ்அகழ்வைப்பகத்தில் சோழர்களின் ஆட்சிப் பரப்பு, தஞ்சை தலைநகர் பற்றிய குறிப்பு, சோழர்காலச் சிற்பங்கள், திருக்கோயிலில் பயன்படுத்தப்படும் விளக்குகள், தஞ்சை பெரிய கோயிலின் அமைப்பு, இராசராசன் சிறப்பை எடுத்துக் கூறும் ஒலி, ஒளி அமைப்பு (Sound and Light Show) ஆகியவை இடம் பெற்றுள்ளன. இக்காட்சியகம் சோழ மன்னர்களின் சிறப்புப் பற்றி அறிந்துகொள்ள பல சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இக்காட்சியகத்திற்கான புதிய வரலாற்றுச் செய்திகளுடன் தற்பொழுது இக்கையேடு வெளியிடப்பெறுகிறது. இக்கையேட்டினைத் தயாரித்த திரு.ச.செல்வராஜ், தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர், மற்றும் காப்பாட்சியர் திரு.கோ.அர்ச்சுணன் ஆகியோரைப் பாராட்டுகிறேன். இந்நூலின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட இத்துறையின் அகழாய்வாளர் முனைவர் சீ. வசந்தி, நிழற்படங்கள் எடுத்து நூலினை அழகுற வெளிவர பணிபுரிந்த திரு. மு.த.ஸ்ரீதரன் நிழற்படம் எடுப்பவர் ஆகியோருக்கும் மற்றும் இந்நூலினைச் செம்மையாக அச்சிடத் துணை புரிந்த அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் எனது பாராட்டுகள். இந்நூலினை வெளியிட தேவையான நிதியினை நல்கிய தமிழ்நாடு அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு சோழர் கலைச் சிறிப்பினை அறிந்துகொள்ள அனைவருக்கும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

க. அருள்மொழி 5/11/2008
ஆணையர்

சென்னை-600 008

முன்னுரை

தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள கலைப் பெட்டகங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினால் அமைக்கப்பட்ட இராசராசன் அகழ்வைப்பகமும் ஒன்றாகும்.

சோழ அரசைச் சோழப் பேரரசாக மாற்றியவன் மாமன்னன் இராசராசன். தில்லையிலிருந்து தேவார ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்து தமிழ் அன்னைக்கு இலக்கிய ஆரம் சூட்டி மகிழ்ந்தவன். அனைத்துச் சமயங்களையும் ஆதரித்துப் போற்றியவன் 'உலகளந்தான் கோலால்', தமிழகம் முழுவதும், நிலங்களை முதன்முதலாக அளந்து கல்பதித்தான். மேலும் உலகோர் வியந்து கண்டுகளிக்கும் வண்ணம் ஒப்பற்ற கலைக் கூடமாகத் திகழும் தென்னக மேரு எனும் தஞ்சை பெரிய கோயிலை அமைத்துத் தந்துள்ளான்.

இப்பேரரசன் கி.பி. 985-இல் முடிபுனைந்து தமிழகத்தை ஆண்டான் என வரலாறு கூறுகிறது. எனவே, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த இராசராசசோழன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டு விழாவினை 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தஞ்சாவூரில் சிறப்பாக நடத்தியது. அவ்விழாவின் ஒரு பகுதியாக தஞ்சாவூரில் இராசராசன் வரலாற்றுக் காட்சியகத்தை இத்துறை அமைத்தது.

இக்காட்சியகம் 1984-ஆம் ஆண்டு அமைத்தபொழுது பல இடங்களில் இருந்து பல சிற்பங்கள் சேகரிக்கப்பட்டு இங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இக்காட்சியகம் அமைக்கும் முயற்சியினை எடுத்த முன்னாள் இயக்குநர்கள் திரு.நடன. காசிநாதன், திரு.கு. தாமோதரன் மற்றும் திரு.தி.சுப்ரமணியன், திரு.ச.பரணன், காப்பாட்சியர்கள், திரு.இரா.செயராமன், இளநிலைக் கல்வெட்டாய்வாளர், ஆகியோர் பணி குறிப்பிடத் தக்கது.

இக்காட்சியகத்தின், காட்சிப் பொருள்களின் சிறப்பை எடுத்துக்கூறும் வகையில் பதிவு அலுவலர்கள் திரு.மா.சந்திரமூர்த்தி, திரு.கி.ஸ்ரீதரன், காப்பாட்சியர் திரு.இரா.ப.கருணானந்தன் ஆகியோர் இணைந்து எழுதிய கையேடு (Guide Book) 1985-ஆம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளது. தஞ்சையில் 1995-இல் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது அமைக்கப்பட்ட இராசராசன் மணி மண்டபத்தில் இக்காட்சியகம் 1996 முதல் இயங்கி வருகிறது. தற்போது மேலும் புதிதாக பல காட்சிப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்காட்சியகத்தைக் காண வரும் பொது மக்கள், வரலாற்று ஆர்வலர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள், கல்லூரி, பள்ளி மாணவ மாணவியர்கள் ஆகியோர்க்கு இது ஒரு கருத்துப் பெட்டகமாக அமைந்துள்ளது.

இந்நூலில் தஞ்சையை ஆண்ட சோழப் பேரரசர்கள் யார், அவர்களின் வழித்தோன்றல்கள், அவர்கள் கட்டிய கோயில்கள், அவர்கள் பொறித்து வைத்த கல்வெட்டுக்கள், சிற்பங்கள் என அனைத்தும் ஒருங்கே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

நாட்டுப் பிரிவுகள், உட்பிரிவுகள், சோழ நாட்டில் பணியாற்றிய அதிகாரிகள், சோழ மன்னர்கள் அமைத்த வாரியங்கள், விதித்த வரிகள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் அம்மன்னர்கள் ஏற்படுத்திய சீரான நிர்வாக சீர்திருத்தங்கள் ஆகியன இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவை படித்து உணரத்தக்கவை ஆகும்

சோழர்கால இலக்கியங்கள் பற்றியும் சோழர் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள் பற்றியும் மற்றும், அனைத்து

பிரிவினரையும், கல்வெட்டுக்களில் வெட்டிவைத்துள்ளமை பற்றியும் இங்கு சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்பெற்றுள்ளது.

இவ்வகழ்வைப்பகத்தைக் காண்பவர்கள் இக்கையேட்டின் உதவியுடன் காணும்பொழுது சோழர்காலத்திற்கே சென்று அவர்களுடன் வாழ்ந்துகொண்டிருப்பது போன்ற உணர்வினை பெறுவர் என்பது திண்ணம்.

எச்செயலைச் செய்தாலும் செவ்வனே செய்தல் வேண்டும். சிறியதாக இருந்தாலும் தெளிவாகவும், படிப்பவர்களின் மனத்தை தெளிவுபடுத்தும் முகத்தானும் அமைதல் வேண்டும் என இந்நூல் செம்மையாக வருவதற்கு தக்க தருணத்தில் உரிய அறிவுரைகளை வழங்கிய எங்கள் துறைத்தலைவர் ஆணையர், முனைவர் **க. அருள்மொழி,** இ.ஆ.ப. அவர்களுக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூல் வெளிவர உறுதுணையாய் இருந்த அனைவருக்கும் எங்களின் அன்பான நன்றியை உளமார தெரிவித்து மகிழ்கிறோம்.

அன்புடன்

ச. செல்வராஜ்

கோ. அர்ச்சுணன்

பொருளடக்கம்

		பக்க எண்
	பதிப்புரை	
	முன்னுரை	
1.	தஞ்சாவூர் - ஊரும் பேரும்	1
2.	தஞ்சையும் சோழப் பேரரசும்	5
3.	சோழ மன்னர் முதலாம் இராசராசனும், சோழநாடும்	8
4.	சோழ மன்னர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க விளக்கக் குறிப்புக்கள்	17
5.	தஞ்சை பெரிய கோயிலின் மாதிரி அமைப்பு	48
6.	கல்வெட்டுகள்	48
7.	சிலம்புகள்	49
8.	காசுகள்	51
9.	அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள்	52
10.	போர்க் கருவிகள்	54
11.	விளக்குகள்	54
12.	ஒளி-ஒலி காட்சி	58
13.	சிற்பங்கள்	58
14.	மரச்சிற்பங்கள்	98
	முடிவுரை	

1 தஞ்சாவூர் - ஊரும் பேரும்

''வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ் கூறும் நல்லுலகம்''

என்று தொல்காப்பியப்பாயிரத்தில் பனம்பாரனாரும்,

''நெடியோன் குன்றமும் தொடியோள் பெளவமும்

தமிழ் வரம்பு அறுத்த தன்புனல் நன்னாடு''

என்று இளங்கோவடிகளும் பாடிப்புகழ்ந்த தண்டமிழ் நாடு மூவேந்தர்களால் ஆளப்பெற்றது என்பதை,

''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு''

என்பதன் மூலம் உணரலாம்.

மேலும் ''முடியுடைய வேந்தர் மூவர்'' என்ற மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களே இம்மண்ணுக்குரியவர்களாகத் திகழ்ந்துள்ளனர். சோழ நாடே தமிழ்நாடு என்று குறிக்கும் அளவிற்குப் புகழ் பெற்று விளங்கியது தஞ்சாவூர். சோழநாடு நீர்வளம் மிக்கது. ''தண்ணீரும் காவிரியே தார்வேந்தனும் சோழனே மண்ணாவதும் சோழ மண்டலமே'' என்று புலவர் பெருமக்களால் பாராட்டப்பட்டதுதான் தஞ்சைத் தரணியாகும். சோழ நாட்டின் உயிர்நாடியாகத் திகழ்ந்து கொண்டிருப்பது காவிரியாறு. இருபுறமும் சோலைகள் நிரம்பிக் காணப்படும். விரிந்து, பரந்த நீண்ட ஆறு என்பதே இதன் கருத்து. மாறவர்மன் சுந்தரபாண்டியன்- மெய்கீர்த்தி, சோழ நாட்டைக் குறிக்கும்பொழுது ''சோலை மலி பழனச் சோணாடு'' என்றே குறிப்பிடுகின்றது.

கண்டராதித்தன் பாடிய திருவிசைப்பா என்ற பதிகத்தில் தன்னைப் பற்றி குறிப்பிடும்பொழுது,

''காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையார்கோன்'' என்றே குறிப்பிடுகிறான்.

சோலைகள் மிகுந்த நாடு என்பதால் இதனை சோலைநாடு என்ற பெயருடன் ஆண்டனர். பின்னர் அதுவே சோழநாடாக மாறியது என்றும் கருதலாம்.

இத்தகு சிறப்பு பெற்ற சோழநாட்டைப் பற்றிய முதற் குறிப்பு அசோகனது கல்வெட்டில் காணப்படுகின்றது. அகில இந்தியாவையும் ஆட்சிபுரிந்த அசோக மாமன்னன் முதன் முதலாக கல்லில் தன் கட்டளைகளைப் பொறித்து கற்சாசனங்களை ஏற்படுத்தினான். அத்தகுச் சிறப்புப் பெற்ற கல்வெட்டுகள் பதின்மூன்று (Rock Edicts). அவற்றில் எட்டாவதாக உள்ள கிர்ணார் பகுதியில் உள்ள கற்பாறையில் வெட்டப்பட்ட அசோகனது ஆட்சிக்குக் கீழ்ப்படாத நாடுகளுள் ஒன்று சோழநாடு என்ற குறிப்பைக் காணமுடிகின்றது. சோழ நாடு என்பதை ''சோட'' என்று குறிக்கின்றான். இதன் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு.

இதன் அடிப்படையில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே காவிரி பாயும் சோழநாட்டை சங்ககால சோழர்கள் ஆண்டு வந்தனர் என்பதற்குத் திட்டவட்டமானதொரு ஆதாரம் கிடைத்துள்ளது. சங்ககாலக் கரிகாலச் சோழன் தஞ்சையை ஆட்சிபுரிந்தான் என்பதற்குப் பழம்பாடல் ஒன்று சான்றாகத் திகழ்கின்றது.

''அஞ்சின் முடிகவித்து ஐம்பத்து மூன்றளவில்
கஞ்சி காவேரிக் கரைகண்டு - தஞ்சையிலே
எண்பத்து மூன்றளவும் ஈண்ட இருந்தேதான்
விண்புக்கான் தண்புகார் வேந்து''

என்கிறது அப்பாடல்.

தஞ்சாவூர் பெயர்க் காரணம் :

தஞ்சாவூர் என்றாலே சோழநாடு என்று பொருள் கொள்ளும் அளவிற்குப் பெயர் பெற்றது. தஞ்சையைச் சோழர்கள் தங்கள் தலைநகரமாக அமைத்துக் கொண்டனர். தலைநகரமாக அமைய வேண்டுமெனில் தன்னிகரற்ற வளத்தையும், அமைப்பையும் கொண்டிருந்தால்தான் தலைநகராக ஏற்க இயலும். தஞ்சாவூர் நீர்வளமும் நிலவளமும் மிக்க செழிப்பான பூமியாக திகழ்ந்ததால் இயற்கையன்னையாகிய குளிர்ந்த காவிரியும் இங்கு வாழும் மக்களை மிகவும் வளர்ச்சியடைச் செய்து, உற்பத்தித் திறனில் தன்னிறைவை எட்டும் அளவிற்குக் கொண்டு சென்று செழிப்பூட்டியது. எனவே, குளிர்ச்சியான நீர்வளமிக்க பூமியைக் குறிக்கும் தண் செய் என்ற பெயர்தான் தஞ்சை என வழங்கியதோ என்று வியக்கும் வண்ணம் அமைந்திருக்கிறது இப்பகுதி.

மேலும், பெருவுடையார்உலா என்ற நூலில் தஞ்சாவூர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதில்,

> ''நேராய் வரம் பெற்று நின்ற தஞ்சை காசுரன் தன்
> பேராய் விளங்குகின்ற பேரூர்''.

தஞ்சன் என்ற ஒரு அரக்கன் வாழ்ந்து வந்தான். அவனை ஆனந்தவல்லி என்ற பெண் கொன்று விடுகின்றாள். அவன் இறப்பதற்கு முன் நான் வாழ்ந்த இந்த ஊருக்குத் தன் பெயரை வைக்க வேண்டும் என வேண்ட, அவன் விருப்பப்படி தஞ்சாபுரி என வழங்கினர் என்றும் அது தற்பொழுது தஞ்சாவூர் ஆனது என்றும் கூறப்படுகிறது.

''சோழநாடு சோறுடைத்து'' என்ற நிலை அக்காலத்து மக்கள் அனைவரும் உணர்ந்த ஒன்று. எனவே, நாட்டில் பஞ்சம் ஏற்படும்பொழுதெல்லாம் அனைவரும் தஞ்சம் புகுந்த ஊர்தான் தஞ்சாவூர் என அழைக்கப்பட்டது. தஞ்சம் தரும் ஊர் பிறர் பஞ்சத்தையும், பசியையும் போக்கிய ஊராகத் திகழ்வதற்குரிய

செழிப்பான வயல்வெளிகளையும், ஆறுகள், குளங்கள், இருமருங்கிலும் சோலைகள் ஆகிய அனைத்துத் தகுதிகளும் நிறைந்த பூமியாக இவ்வூர் திகழ்ந்துள்ளது. எனவே, நாட்டு மக்களின் அடிப்படைத் தேவையாகிய உணவளித்து பசிப்பிணியைப் போக்கிய ஊராகத் தஞ்சாவூர் திகழ்ந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பதே மிகவும் ஏற்புடையதாகத் தோன்றுகின்றது. மனித வாழ்க்கைக்குத் தேவையான உணவைத் தருகின்ற உணவுக் களஞ்சியம்தான் தஞ்சாவூர் என்பதில் ஐயமில்லை.

ஊர்ப் பெயர் ஆய்வுகளின் அடிப்படையில் ஒரு ஊரின் பெயர் இயற்கையான வளத்தின் அடிப்படையில் அங்கு விளையும் பயிர்கள், செடி, கொடி மற்றும் மரங்களின் பெயர்களைக் கொண்டு அமையும் என்பது பெறப்படுகின்றது.

தண்சாய் என்ற ஒருவகைக் கோரைப்புல் இங்குள்ள ஆற்றின் இரண்டு கரைகளிலும் அதிக அளவில் விளைந்ததால் தண்சாய் தான் தஞ்சை ஆனதோ என்று சிலர் கருதுவர்.

இலக்கியங்களிலும், பிற நூல்களிலும் தஞ்சாவூர் தஞ்சை என்றே குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுகளில் தஞ்சாவூர் என்றே பொறிக்கப்பட்டுள்ளது. எனவே, தஞ்சை என அனைவராலும் குறிக்கப்பட்டு பின்னர் கல்வெட்டுகளில் தஞ்சாவூர் என முழுமை அடைந்து இன்றளவிலும் இப்பெயரே நிலைத்து நிற்கின்றது என்பதே இவ்வூருக்குத் தனிச்சிறப்பு ஆகும்.

''எழிலார் தஞ்சை,'' 'மங்களஞ்சேர் தஞ்சை' என சரபேந்திரர் குறவஞ்சி குறிப்பிடுகிறது.

எனவே, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் இவ்வூர் தஞ்சாவூர் என்று அழைக்கப்பட்டு வந்ததை இதன்மூலம் நன்கு அறியலாம்.

2. தஞ்சையும் - சோழப் பேரரசும்

தமிழகத்தில் சங்க காலம் தொட்டே சோழர்கள் ஆட்சி புரிந்து வந்துள்ளார்கள். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இச்சோழ வம்சத்தினர் மீண்டும் தலையெடுக்கத் துவங்கினர். தொடர்ந்து ஆட்சிபுரிந்த மன்னர்கள் தஞ்சையையும், சோழ நாட்டையும், வளமையும், செழிப்பும் மிக்கதாக்கி அவர்கள் அரசைச் சோழப் பேரரசு என்ற அளவிற்கு உயர்த்தினர். ''சோழநாடு சோறுடைத்து'' என்ற புகழுக்குரியதாக்கினர்.

சங்க காலத்திற்குப் பின்னர் சோழ மன்னர்கள் வலுவிழந்த பொழுது, சோழர்களின் பழைய தலைநகரமாகத் திகழ்ந்த பழையாறை, உறையூர் ஆகிய பகுதிகளின் சிற்றரசர்களாகவும், அதிக அளவில் வெளிப்படாத வகையிலும் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு தங்கள் குலம் செழிக்க வழிவகுத்தனர்.

பிற்காலத்தில் சிறிது சிறிதாக வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் தம்வலிமையையும் பெருக்கிக் கொண்ட சோழ மன்னர்கள் தஞ்சையில் தங்களின் சோழ வம்சத்தை மீண்டும் நிலைநிறுத்தத் துவங்கினார்கள். அவ்வாறு முதன் முதலில் சோழ வம்சத்தின் குலக் கொழுந்தாக வந்து குத்து விளக்கு ஏற்றியவன் பரகேசரிவர்மனான விசயாலயன் என்பவனே ஆவான்.

முத்தரையரும் சோழர்களும் :

பிற்காலப் பல்லவர்கள் ஆட்சியில் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தவர்கள் முத்தரையர்கள். இவர்கள் தஞ்சையைத் தம்வசம் வைத்திருந்த காலத்தில் நியமம் என்ற ஆயிரத்தளியில் குறுநில மன்னர்களாக ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்களைப் பற்றிய செய்திகள் செந்தலைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

செந்தலையில் உள்ள சுந்தரேசுரர் கோயிலின் முன்மண்டபத்தில் வைத்து கட்டப்பட்டுள்ள தூண் கல்வெட்டுகள் இப்பகுதியை முத்தரையர்கள் ஆட்சி புரிந்ததைத் தெளிவுபடுத்துகின்றன. மூன்று தலைமுறைத் தலைவர்களை மட்டுமே இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாமவன் மூத்த பெரும்பிடுகு முத்தரையன் குவாவன்மாறன், அடுத்து அவன் மகன் இளங்கோவதியரையன் மாறன் பரமேஸ்வரன். மூன்றாமவன் பரமேசுவரனுடைய மகனான பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன் ஆவான். இவர்கள் பல்லவர்களின் ஆட்சிக்காலத்தில் தஞ்சைப் பகுதியின் சிற்றரசர்களாகத் திகழ்ந்தவர்கள். இவர்கள் தங்களின் தலைநகரமாக நியமத்தை வைத்துக்கொண்டு, தஞ்சையையும், வல்லத்தையும் பல்லவர்கள் துணை கொண்டு அரசு புரிந்துள்ளனர்.

விசயாலயனும் தஞ்சையும் :

விசயாலயன் தஞ்சையையும், வல்லத்தையும் வென்ற பிறகு தஞ்சையைத் தலைநகரமாக நிறுவினான். தன் புதிய நகரில் நிசும்பசூதனி என்ற துர்க்கைக்கு கோயில் எடுப்பித்தான். இதைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

மேலும், முத்தரையர் வழித்தோன்றலான இளங்கோ முத்தரையன் பல்லவர்கள் காலம் முடியத் தொடங்கியபோதுதான் தலையெடுத்து சுய ஆட்சியை நடத்தி வந்தான். இவனைத் தக்க தருணத்தில் வீழ்த்தி பரகேசரிவர்மனான விசயாலயன் சோழ வம்சத்திற்கு மீண்டும் ஓர் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினான்.

இம்மன்னனைப் பற்றிய பல கல்வெட்டுகள் இவனது வீரம், கொடை பற்றியதாக கண்டயறிப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டம், திருவெள்ளறையில் உள்ள திருமாணிக்கப்பெருமாள் அடிகளுக்கு அளித்த தானம், அடுத்து திருக்கோயிலூரில் கீழூர், உத்திரமேரூர்

வைகுந்த பெருமாள்கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகள் என பரந்துபட்ட பல கல்வெட்டுகளை ஒப்பிட்டு தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர்கள் விசயாலயன் தன் ஆட்சிக் காலத்திலேயே சோழ நாட்டை பரந்துபட்டதொரு நாடாக ஆக்கியுள்ளான் என தெளிவுபடுத்தி உள்ளார். விசயாலயன் காலத்தில் வடக்கே காஞ்சிபுரம், தெற்கே விசயாலய சோளீஸ்வரம் கோயில் அமைந்துள்ள நார்த்தாமலை வரையிலும் தன் நாட்டை விரிவுபடுத்தியுள்ளான்.

இவ்வாறு மீண்டும் தங்களது சோழ வம்சத்தை தலையெடுக்க வைத்தது மட்டுமின்றி தன்னிகரில்லாத நாடாகவும், ஒரு பேரரசாகவும் திகழ வழி வகுத்தவன் இந்த பரகேசரிவர்மனான விசயாலய சோழன் ஆவான். இவனும் இவன் மகன் முதலாம் ஆதித்தனும் தங்கள் நாட்டை விரிவுபடுத்தவும், புதிதாக வென்ற நாடுகளை அமைதிப்படுத்தவுமே தங்கள் காலத்தைச் செலவிட நேர்ந்ததால், இவர்கள் காலத்தில் கலையை அதிக அளவில் வளர்க்க முடியவில்லை. குறைந்த அளவில் கோயில்களைக் கட்டினாலும், சோழப் பேரரசின் துவக்கம் என்பதையும் அறியாத நிலையில் சோழர் கலைக்கு அச்சாரம் இட்ட இவர்களின் நார்த்தாமலை விசயாலய சோழீஸ்வரம், தஞ்சை நிசும்பசூதனி, காளியாபட்டி சிவன்கோயில், பனங்குடி அகத்தீசுவரன் கோயில் போன்றவை சோழர் கலைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வனவாகும்.

இவ்வாறு முத்தரையர்களிடம் இருந்து பெற்ற தஞ்சையைச் சோழர்களின் தலைநகரமாக மாற்றி அதன் பெருமையையும் சோழப்பேரரசையும் நிறுவிய பெருமைக்குரியவனாக திகழ்ந்தவன் விசயாலயச் சோழன் ஆவான்.

3. சோழ மன்னர் முதலாம் இராசராசனும் சோழநாடும்

முத்தமிழ் வளர்த்த செந்தமிழ் திருநாட்டில் கலை வளர்த்த தஞ்சை மாநகரில் சோழப்பேரரசு தன் புலிக்கொடியைப் படரவிட்டு பட்டொளி பரப்பிக் கொண்டிருந்த காலம். சோழர் குலத்தில் தோன்றிய விடிவெள்ளியாகத் திகழ்ந்தான் முதலாம் இராசராசன். இவன் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி ஓங்கு புகழ் பெற்று விளங்கினான். அதேபோன்று இந்த இந்தியத் திருநாடே வியக்கும் வண்ணம் ஈடு இணையற்ற ஒரு கற்றளியை எழுப்பிப் பெருமை பெற்றான். இன்று உலகமே இவனது கலைப் படைப்பைக் கண்டு வியக்கிறது.

உயர்ந்த விமானம். அதனுள்ளே மிக உயரமான பெருவுடையாரை கர்ப்பகிருகத்திலே அமைத்ததுடன் இத்திருக் கற்றளியைச் சுற்றிலும் திருச்சுற்று மாளிகையையும் அமைத்து ஓங்கி உலகளாவும் புகழ் பெறவேண்டும் என்று எண்ணியே இந்த கலைப்படைப்பைப் படைத்தான் போலும்.

மன்னர்கள் பலரும் கோயில்கள் எடுப்பிப்பது உண்டு. ஆனால் அவை அவர்கள் காலத்தில் முடிவதில்லை. சிலர் முடித்தாலும் அதைப் பற்றிய குறிப்பை, கல்வெட்டில் பொறித்து வைப்பதில்லை. இவற்றிற்கெல்லாம் மாறுபட்ட வகையில் முதலாம் இராசராசன் தன் காலத்தில் ஆரம்பித்த இராசராசேச்சுரம் என்னும் இத்திருக்கற்றளியைத் தன்னுடைய காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது என்றும், இதற்குப் பொருள் தந்தவர்கள் யார் யார்? என்பதையும், தான் உட்பட பலரும் சேர்ந்துதான் இக்கோயிலை எடுப்பித்தோம் என்பதையும் பெருமைபட கூறுவதில் முதலாம் இராசராசன் முதலாம் இடத்திலே வந்து மெய்ப்பிக்கின்றான் தன் மெய்கீர்த்தி மூலம்.

முதலாம் இராசராசன், இராசராசேச்சுரம் எனும் தஞ்சைப் பெரிய கோயிலைத் தன் காலத்திலே எடுப்பித்தான் என்பதை உணர்த்தும் கல்வெட்டு, இக்கோயிலின் கர்ப்பகிரகத்தின் வெளியே இடை நாழியின் வடக்குப் பக்கத்தில் உள்ள படிக்கட்டுகளுக்கு அருகே அமைந்துள்ளது.

கல்வெட்டு வாசகம் :

1. ஸ்வஸ்திஸ்ரீ : திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூ

2. ண்டமை மநக் கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்ப பாடியுங் குடமலை நாடுங் கொல்ல

3. முங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரு

4. ழியுளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டேய் செழியரைத் தேசுகொள் கோராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜ ராஜதேவர்க்கு யாண்டு இ

5. ருபத்தாறாவது நாள் இருபதினால் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் தஞ்சாவூர்க் கோயிலிநுள்ளால் இருமடி சோழநின் கீழைத் திரும

6. ஞ்சந சாலை தாநஞ் செய்தருளாவிருந்து பாண்டிய குலாசினி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி

7. ஸ்ரீராஜ ராஜீஸ்வரமுடையார்க்கு நாம் குடுத்தநவும் அக்கன் குடுத்தநவும் நம் பெண்டுகள் குடுத்தநவும் மற்றும் குடுத்தார் குடுத்தநவும்.

8. ஸ்ரீ விமானத்திலே கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டிநபடி.... என்று தொடர்கிறது.

இராசராசேச்சுரம் - பெருவுடையார் கோயில் :

கிழக்கு பார்த்த நிலையில் உயர்ந்து நிற்கும் இப்பெருங் கோயில் இரண்டு பெரும் சுற்றுச் சுவர்களைக் கொண்டது. தற்பொழுது ஒன்றைத்தான் காண முடிகின்றது. இத்திருச்சுற்றின் கீழ்த்திசையில் இரண்டாவதாக வெளிப்பகுதியில் இருந்து கோயிலில் காணப் பெறும் முதற் கோபுரத்தினைக் கேரளாந்தகன் திருவாசல் என்றும் இரண்டாம் கோபுரம் 'இராசராசன் திருவாசல்' என்றும் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

நுழைவு கோபுரம், நந்தி, நந்தி மண்டபம் பின்னர் உயர்ந்த படிக்கட்டுகள் முகமண்டபம், அர்த்த மண்டபம், இடைநாழி, பின்னர் கர்ப்பகிருகம் என கோயிலின் அமைப்பு செல்கின்றது. கர்ப்பகிருகத்தின் மேலே உயர்ந்த விமானம் தென் கைலாயம் என்றும், தெட்சிணமேரு என்றும் பெருமையுடன் அழைப்பதற்கு ஏற்ப கல்லாலே மிகவும் உயரமான அமைப்புடன் மேலே கலசத்தையும் தாங்கி நிற்பது காண்போரை வியக்கச் செய்யும் கட்டிடக் கலை நுணுக்கமாகும். உபபீடத்திலிருந்து 216 அடி உயரமான திருக்கோயிலை உருவாக்கிய தச்சன் ''வீர சோழன் குஞ்சரமல்லனான இராசராசப் பெருந்தச்சன் என்பவன் ஆவான். கோபுரத்தின் இருமருங்கிலும் துவாரபாலகர் சிற்பங்களில் ஆரம்பித்து ஒவ்வொரு பகுதியிலும் புடைப்புச் சிற்பங்களின் மூலம் அன்றைய புராணக் கதைகளையும், சைவ அடியார்களின் சிற்பங்களையும் குறிப்பாக வள்ளித் திருமணம், கிராதார்ச்சுன

கதை, காமதகனம், கண்ணப்பர் கதை என மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி அமைத்திருப்பது சிறப்புக்குரியது.

சோழப் பேரரசில் இராசராசன் தன்னிகரில்லா புகழ்பெற்றதன் காரணம் பல்வேறு அரிய செயல்களைச் செய்தது மட்டுமின்றி மக்கள் நலனில் காட்டிய அக்கரையும் நாட்டு நலனுக்காக அவன் செய்த சீர்திருத்தங்களுமாகும். சோழப் பேரரசில் முதலாம் இராசராசன் காலத்தைப் பொற்காலம் எனப் போற்றுவர். அவ்வாறு போற்றுதலுக்குரிய அவனது நிகழ்வுகளை இங்கு தொகுத்துக் காண்போம்.

1. முதன்முதலில் தான் பெற்ற வெற்றிகளை வரிசைப்படுத்தி உரைத்தமைக்கு மெய்கீர்த்தி என்று பெயரிட்டு கல்வெட்டில் பொறிக்கச் செய்த செயல்.

2. தஞ்சையில் ''தஞ்சை தளிக்குளத்தார்'' எனும் தளிக்குளத்தில் உலகம் வியக்கும் வண்ணம் கட்டிடக் கலையிலும், சிற்பச் சிறப்பிலும் அனைத்துப் பகுதிகளையும் கல்லாலே கட்டிய பெருமையைப் பெற்றது. முதலாம் இராசராசன் சிவபாதசேகரன் என்னுஞ் சிறப்புப் பெயருக்கு ஏற்ப தன் சிவபக்தியை வெளிப்படுத்தியது.

3. இப்பேரரசன் தன் ஆட்சியில் சோழநாடு முழுவதையும் உரிய அளவுகோல் கொண்டு அளக்கச் செய்தான். இராசராசன் மாராயன் இப்பணியை மேற்கொண்டதால் அவனை உலகளந்தான்; இராசராச மாராயன் என்று சிறப்பித்தது.

4. முதலாம் இராசராசன் தன் நாட்டை அளந்து முடித்தான். அதன் பின் அதனை உரிய மண்டலமாகவும், மண்டலங்களை பல வளநாடுகளாகவும், வளநாடுகளை

நாடுகளாகவும் பிரித்தான். வளநாடு என்பது தற்போதைய மாவட்டத்திற்கு ஒப்பானது. மண்டலம் என்பது தற்போதைய மாநிலமாகவும் கருதலாம். வளநாடு என்பது பல நாடுகளையும், கூற்றங்களையும் தன்னகத்தே கொண்டது ஆகும். இவ்வாறு நாட்டைத் தெளிவான உட்பிரிவுகளுடன் பிரித்து அமைத்த பெருமை முதலாம் இராசராசனையே சாரும்.

5. இவனது 17-வது ஆட்சி ஆண்டு முதல் வெட்டப்பட்ட கல்வெட்டுகளில் ஊர்ப்பெயர்களையும், நாடுகளின் பெயர்களையும் குறிக்கும்பொழுது அந்நாடு அமைந்துள்ள வளநாட்டையும் குறித்து கூறும் வழக்கத்தை ஏற்படுத்தியுள்ளான்.

முதலாம் இராசராசன் நடராசப் பெருமானை ஆடவல்லான் என அழைத்து இதன் பெயரிலேயே எடைக்கற்களை ஆடவல்லான் என்ற பெயரில் பயன்படுத்தினான்.

தஞ்சைப் பெரிய கோயிலின் உட்பகுதியில் அமைந்துள்ள அம்மன்கோயில், சுப்ரமணியர் கோயில், விநாயகர் கோயில், கரூவூர்த்தேவர் கோயில், வராகிகோயில் ஆகியவை முறையே முதலாம் இராசராசனுக்குப் பின்னர் வந்த பிற்காலப் பாண்டியர், தஞ்சை நாயக்கர், மராட்டியர்களால் கட்டப்பட்டவை ஆகும்.

தஞ்சை விமானத்தில் வடபுறம் ஓர் ஐரோப்பியரது உருவச் சிற்பம் உள்ளது. இது சுதையாலானது. தஞ்சை இரகுநாத நாயக்கன் தரங்கம்பாடியில் டென்மார்க் நாட்டினருக்கு வணிக நிறுவனம் அமைக்க அனுமதி அளித்தான். அதுசமயம் ஐரோப் பியர்களின் நடமாட்டம் அதிகரித்தது. அவர்களது வினோதமான உடையமைப்பு, உருவமைப்பு சிற்பிகளின் கவனத்தை ஈர்த்ததால் அவர்களின் உருவத்தை அங்கே அமைத்துள்ளனர்.

தஞ்சை பெருவுடையார்க்கோயில் கருவறை மேல் காணப்படும் மிக உயரமான விமானம், தட்சிணமேரு என்று இராசராசனால் அழைக்கப்பட்டது. நுழைவாயிலில் காணப்படும் உயரமான கட்டிடப் பகுதியைக் கோபுரம் என்று அழைத்தல் வேண்டும் என சிற்ப வல்லுனர்கள் குறித்துள்ளனர்.

சோழர்கள் காலத்தில் அகன்ற உயரமான கோபுரங்களாகத் திகழ்ந்த இக்கட்டடக் கலை விசயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தான் மிக உயர்ந்து எழுநிலை மாடங்களைக் கொண்ட ராசகோபுரங்களாகத் திகழ்ந்தன. பெரும்பாலும் கிருஷ்ண தேவராயர் காலத்தில் மிகவும் உயரமான கோபுரங்களை அமைத்ததால், இவற்றை ராயர்கோபுரம் என்றும் ராசகோபுரம் என்றும் அழைத்தனர்.

பல்லாற்றானும் சிறப்பினைப் பெற்ற முதலாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் மக்கள் முத்தமிழ் கொண்டு இன்பமான வாழ்க்கையை வாழ்ந்து மகிழ்ந்ததால் அவனை அடியொற்றியே பின்னர் வந்த மன்னர்கள் மேலும் பல பொலிவு ஏற்பட வழிவகுத்தனர்.

தஞ்சைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமின்றி வடமொழி பயின்ற புலவர்களும் முதலாம் இராசராசனின் புகழை வியந்து பாடியுள்ளனர். அவ்வாறு முதலாம் இராசராசனின் புகழ்பாடும் வடமொழிப் பாவலனின் பாடல் கல்வெட்டு ஒன்று அண்மையில் கண்டறியப்பட்டது. இந்த பாடல் கல்வெட்டைத் தாங்கிய கற்றூணின் ஒரு பகுதி இராசராசன் மணிமண்டபத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இப்பாடல்கள் இராசராசனின் வெற்றிச் சிறப்பு, அவன் மக்களின்பால் காட்டிய அன்பு, பகைவர்களுக்கு அவன் கொடுத்த

அச்சம் ஆகியவற்றை மிகவும் அழகுபட எடுத்துரைக்கின்றன. அவற்றின் சுருக்கத்தை இங்கு காண்போம்.

சிறந்த அறிவாளியான மும்முடிச் சோழனே உன்னுடன் கடும் போரில் விருப்பம் கொண்ட நல்ல மரபில் வந்த எதிரிகள் தற்போது அச்சம் தெளிந்து தலைநிமிர்ந்து நிற்கின்றனர். காரணம் கடும் சுரத்தால் துன்புற்றவன் விபூதியை ரக்சையாக இட்டுக் கொள்வது போல உன் பாத தூளியைத் தங்கள் மகுடத்தில் தரித்ததன் பயனே அதுபோலத் தெரிகிறது.

இந்திரனுக்கு நிகரானவனே! உன் பகை மன்னர்கள் உனக்கு அடங்கியவர்களாக நாட்டிலே வாழ்ந்து பூமியின் பயன்களையும் செல்வ வளங்களையும் அனுபவிக்க மனமில்லாமல் காட்டிலே வாழ்ந்து, நெல்லிக்கனியையும், வில்வப் பழத்தையும் உண்டு திகழ்கின்றனரே! இது விந்தையல்லவா?

இராசராசனே! உன் பகைவர்கள் வான்வழியாகத் தப்பிச் செல்ல நினைக்கும்போது உன் வில் தடுக்கின்றது. கடலிலே உன் மீனும், காட்டிலே உன் புலியும் அவர்களை மிரட்டுகின்றது. இனி அவர்களுக்கு உன் நாட்டில் அடங்கி வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை. மும்முடிச் சோழன் என்பது பொருத்தமான பெயர் உனக்கு.

மும்முடிச் சோழனே இந்தக் குவலயத்தைத் தங்கக் காப்பணிந்த உன் கைகள்தான் தாங்குகின்றன என்று சாதாரண மக்கள் சொல்கின்றனர். ஆனால் உன்னால் வெற்றி கொள்ளப்பட்ட பகை மன்னர்களின் தலைகளில் வைத்த உன் காலல்லவா இந்த பூமியைத் தாங்குகின்றது.

சோழனே! உன் காலடியில் வீழ்ந்த பகைவர்களின் மகுடங்களில் உள்ள இரத்தினங்களால் சிவந்தன உன் பொற்

பாதங்கள். அத்தகு பெருமை பெற்ற நீ உன் அழகினால் மட்டுமே அவர்களை வெல்லவில்லை. உன் கையில் உள்ள பாம்பு போன்ற வாளும் அவர்களைக் கலக்கமுறச் செய்கிறது.

மும்முடிச் சோழனே! நேற்றுவரை பலவிதமான எண்ணங்களால் உன்னிடம் பகைமை பாராட்டியவர்கள், இப்போது உன் நற்குணங்களாலும், ஆட்சித் திறத்தாலும் அச்சம் தெளிந்து நாற்றிசைகளிலும் உன் புகழ்பாடுகின்றனர். அப்படிப்பட்ட மகிமை வாய்ந்த நீ பல்லாண்டு வாழ்வாயாக! என பலவாறாகப் புகழ்ந்து அவன் கொடை, நட்பு, வீரம், ஆட்சித்திறன் ஆகியவற்றைப் பிற நாட்டவரும் கண்டு வியக்கும் வண்ணம் முதலாம் இராசராசசோழனது புகழ் என்றென்றும் நிலைப்பதற்காக, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அவன் ஆட்சிபுரிந்த தஞ்சைத் தரணியிலே சோழர்குலப் பெருமையை அறிந்து கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டதுதான் இந்த இராசராசசோழன் அகழ்வைப்பகம்.

உதவிய நூல்கள் :

1. பிற்காலச் சோழர் வரலாறு : தி.வை.சதாசிவ பண்டாரத்தார் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.
2. சோழர் கலைப்பாணி : திரு. S.R. பாலசுப்பிரமணியன்
3. இராசராசன் புகழ் பாடும் இலக்கியம் : முனைவர் சொ.சாந்தலிங்கம் கல்வெட்டு இதழ் 46-இல் வந்த கட்டுரை, தொல்லியல் துறை, சென்னை.

4.	இராசராசேச்சுரம்	:	நடன. காசிநாதன், மேனாள் இயக்குநர், தொல்லியல் துறை-1994
5.	நெஞ்சை அள்ளும் தஞ்சை	:	புலவர் செ.இராசு தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 1994
6.	இராசராசன் சிறப்புமலர்: துணுக்குகள் எழுபது	:	தொல்லியல் துறை தொழில் நுட்பப் பணியாளர் பண்பாட்டுக் கழகம், மதுரை-1984

4. சோழ மன்னர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க விளக்கக் குறிப்புக்கள்

தஞ்சையை ஆட்சிபுரிந்த சோழ மன்னர்கள் பலர். அவர்களின் குடிவழித் தோன்றல்கள் பட்டியல், சோழ மன்னர்களின் குடிவழி இவற்றை எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இங்கு வழங்கப்பட்டுள்ளது.

சோழப் பேரரசில் தன்னிகரில்லாச் சிறப்புப் பெற்ற முதலாம் இராசராச சோழனின் பெயர்கள், அவனது மனைவியர்கள், அவர்களது வீர வரலாற்றைக் கூறும் நூல்கள், இவன் காலத்து நாட்டுப் பிரிவுகள் ஆட்சிமுறை மற்றும் நகராட்சி அமைப்பு, சபைக்குரிய அலுவலர்கள், மன்னனுக்குத் துணை செய்த அரசு அலுவலர்கள் அனைத்தும் இங்கு தொகுத்து எழுதப்பட்டுள்ளது. இவை இராசராசனின் ஆட்சி முறைகளையும், அலுவலர்களையும் நன்கு அறிந்து கொள்ள உதவும்.

முதலாம் இராசராசனால் கட்டப்பட்ட இராசராசேச்சுரம் கோயிலைக் கட்டிய சிற்பி மற்றும் இவன் காலத்திய தலைமைச் சிற்பி அவர்களுக்கு வழங்கிய பெயர்கள் ஆகியவை இங்கு தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

வாரியங்கள்; வரிகள், வரி வசூல் உரிமை பெற்ற அலுவலர்கள், சோழ நாட்டின் நிலங்கள் முழுவதையும் அளக்க பயன்படுத்திய உலகளந்தான் கோல் அதன் விளக்கம், இராசராசன் எடுத்த கோயிலுக்கு அவனால் அளிக்கப்பட்ட பொன்னாலான திருப்பரிகலன்கள், வெள்ளியாலான திருப்பரிகலன்கள், எழுந்தருளிவித்த திருமேனிகள் என பட்டியலிட்டு இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சோழர் காலத்துப் புலவர்கள், இலக்கியங்கள், சோழர் காலத்தில் தஞ்சை நகர அமைப்பு, தஞ்சை நகரில் காணப்பட்ட

தெருக்கள், சோழர் காலத்தில் தேர்தலில் நிற்கத் தகுதி உடையோர், தகுதி அற்றோர் என பட்டியலிட்டு இந்நூலை படிப்பவர்கள் அறியும் வண்ணம் தொகுத்து அளிக்கப் பட்டுள்ளது.

சோழர்கள் கலை வளர்ப்பதில் மட்டுமின்றி வீரத்திலும், சிறந்து விளங்கினர். அவர்களின் போர்த்திறம், படைக்கலன்கள், போரிட்ட இடங்கள், போரிட்ட மன்னர்களின் பெயர்கள் ஆகியவை பட்டியலிடப்பட்டுள்ளன.

சோழர் காலத்தில் சோழநாட்டில் மட்டுமின்றி அவர் வென்ற நாடுகளிலும் ஏரிகள், குளங்கள் வெட்டி நீர்ப்பாசன வசதி செய்து வளமாக்கியதுடன், நெல் விளையும் பூமியாக மாற்றினர். அத்தகு ஏரிகள், வாய்க்கால்கள், நதிகள் அனைத்தும் தொகுத்து இந்நூலில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

சோழர் குடி வழி

விசயாலயன் (கி.பி. 846 - 881)
முதலாம் ஆதித்தன் (871 - 907)
முதல் பராந்தகன் (907 - 954)



ஆட்சி முறை அமைப்பு


அரசன்
பேராட்சி
ஊராட்சி
மகாசபை
நிதி
நீதி
கல்வி
நகரசபை
ஊர்சபை
கிராமசபை
தேவதானசபை
வெள்ளான் வகை
வாரியங்கள்
குடும்புகள்
நாணயம்
குமார கணத்தார்
வலஞ்சியர்

இராசராசனின் பெயர்கள்

1. அருண்மொழி
2. அரிதுர்க்கலங்கன்
3. இரணமுக பீமன்
4. இரவி வம்ச சிகாமணி
5. இராச சர்வஞ்ஞன்
6. இராச கண்டியன்
7. சத்ரு புசங்கன்
8. சிங்களாந்தகன்
9. சோழ மார்த்தாண்டன்
10. சோழேந்திர சிம்மன்
11. தெலிங்ககுலகாலன்
12. நித்ய விநோதன்
13. பாண்டிய குலாசனி
14. மும்முடிச்சோழன்
15. சனநாதன்
16. சத்திரிய சிகாமணி
17. அபய குலசேகரன்
18. இரவிகுல மாணிக்கன்
19. இராசராசன்
20. இராசாச்ரயன்
21. இராச மார்த்தாண்டன்
22. இராச விநோதன்
23. கேரளாந்தகன்
24. சண்ட பராக்ரமன்
25. சிவபாத சேகரன்
26. சோழகுல சுந்தரன்
27. திருமுறை கண்ட சோழன்
28. நிகரிலி சோழன்
29. பண்டித சோழன்
30. பெரிய பெருமாள்
31. மூர்த்த விக்ரமாபரணன்
32. செயங்கொண்ட சோழன்

இராசராசனின் மனைவியர்

1. உலக மாதேவி
2. அபிமான வல்லி
3. இலாட மாதேவி
4. சோழ மாதேவி
5. திரைலோக்ய மாதேவி
6. பிரிதிவி மாதேவி
7. பஞ்சவன் மாதேவி
8. மீனவன் மாதேவி
9. வானவன் மாதேவி (திரிபுவன மாதேவி)
10. வீர நாராயணி
11. வில்லவன் மாதேவி

இராசராசன் காலத்து நாட்டுப் பிரிவு - மண்டலங்கள்

1. அதிராசராச மண்டலம் :

சேலம் மாவட்டத் தென்பகுதி - கோவை - திருச்சி மாவட்டங்கள்

2. இராசராசப் பாண்டி மண்டலம் :

மதுரை - இராமநாதபுரம் - திருநெல்வேலி மாவட்டங்கள்

3. செயங்கொண்ட சோழ மண்டலம் :

தென்னார்க்காடு - செங்கற்பட்டு - வடார்க்காடு - சித்தூர் மாவட்டங்கள்.

4. சோழ மண்டலம் :

தஞ்சாவூர் மாவட்டம் - திருச்சி மாவட்டக் கிழக்குப் பகுதி

5. நிகரிலிச் சோழ மண்டலம் :

மைசூரின் தென்பகுதி - பெல்லாரி மாவட்டம் - தருமபுரி மாவட்டம்.

6. மலை மண்டலம் :

திருவாங்கூர் - கொச்சி உள்ளடங்கிய சேரநாட்டு மேற்குக் கடற்கரைப் பகுதி.

7. மும்முடிச் சோழ மண்டலம் :

மைசூரின் தென்பகுதி - சேலம் மாவட்ட வடபகுதி- தர்மபுரி மாவட்டம் - ஒசூர் பகுதி.

8. வேங்கை மண்டலம் :

கிருட்டிண - கோதாவரி ஆறுகளுக்கு இடைப்பட்ட கீழைச் சாளுக்கிய நாடு.

சபைக்குரிய அலுவலர்கள்

1. பிணக்கறுப்பான்
2. கணக்கன்
3. கீழ்க் கணக்கன்
4. பாடிகாப்பான்
5. தண்டுவான்
6. அடிக்கீழ் நிற்பான்

பணிகள் :

1. **நடுநிலையாளன் :** கிராமசபை நடைபெறும்போது உதவி செய்வதோடு அங்கு ஏற்படும் கருத்து வேறுபாடுகளை நடுநிலையாக இருந்து தீர்ப்பவனாவான்.
2. **கணக்கன்** : சபைக்குரிய கணக்கை எழுதுபவன் ஆவான். சபை விரும்பும்போது கணக்கை அவ்வப்போது காட்டுவதோடு ஆண்டு இறுதியில் கணக்கைச் சமர்ப்பிக்க வேண்டும்.
3. **கீழ்க் கணக்கன்** : கணக்கனுக்கு உதவி செய்ய இவன் இருந்தான்.
4. **பாடி காப்பான்** : கலகம் திருட்டு முதலான குற்றங்கள் ஊரில் நிகழாவண்ணம் காப்பவன்.
5. **தண்டுவான் :** கிராம மக்கள் அரசிற்கும், ஊர்ச்சபைக்கும் கொடுக்க வேண்டிய வரிகளை வசூலிப்பவனாவான்.
6. **அடிக்கீழ் நிற்பான் :** ஊர்ச் சபையாருக்குக் குற்றேவல் புரிபவன்.

ஊதியங்கள் :

நாள் ஒன்றுக்கு ''நானாழி நெல்''

ஆண்டுக்கு - ஏழு கழஞ்சு பொன், இரண்டு ஆடை

பேராட்சி முறையில் மன்னனுக்குத் துணை செய்த அரசு அலுவலர்கள்:

1. உத்திர மந்திரி
2. பெருந்தர அதிகாரிகள்
3. திருமந்திர ஓலை
4. திருமந்திர ஓலை நாயகம்
5. ஒப்பிட்டுப் புகுந்த கேழ்வி
6. வரியிலிடு
7. காடுவெட்டி
8. உடன்கூட்டத்து அதிகாரி
9. அணுக்கத் தொண்டன்
10. நடுவிருக்கை
11. விடையில் அதிகாரி
12. உள்வரி திணைக்களத்துக் கண்காணி
13. புரவரித் திணைக்களம்
14. புரவரித் திணைக்களத்து நாயகம்
15. வரிப் பொத்தகம்
16. முகவெட்டி
17. வரிப்பொத்தகக் கணக்கு
18. வரியிலிடு புரவரித்திணைக்களத்து நாயகம்
19. கடமை எழுதுவோன்
20. பட்டோலை
21. ஸ்ரீகாரிய ஆராய்ச்சி

பெண் அதிகாரிகள்

அரசியின் ஆணையை நிறைவேற்றிய பெண் அதிகாரி ''அதிகாரிச்சி'' என்று அழைக்கப்பட்டாள்.

சோழர் காலத் தஞ்சை நகர அமைப்பு

தெரு : தஞ்சாவூர்ப் புறம்படி

1. காந்தர்வத் தெரு
2. மடைப்பள்ளித் தெரு
3. வில்லிகள் தெரு
4. ஆனைகடுவார் தெரு
5. ஆனை ஆட்கள் தெரு
6. பன்மையார் தெரு
7. சாலியத் தெரு

பெருந்தெரு : தஞ்சாவூர்ப் புறம்படி

1. மும்முடிச் சோழப் பெருந்தெரு
2. நித்தவிநோதப் பெருந்தெரு
3. வீரசிகாமணிப் பெருந்தெரு
4. வீரசோழப் பெருந்தெரு
5. செயங்கொண்ட சோழப் பெருந்தெரு
6. இராசவித்யாதரப் பெருந்தெரு
7. சூரசிகாமணிப் பெருந்தெரு

பேரங்காடி : தஞ்சாவூர்ப் புறம்படி

திரிபுவன மாதேவி பேரங்காடி

மடவிளாகம் : தஞ்சாவூர்ப் புறம்படி

ரவுத்ர மகாகாளத்து மடவிளாகம்

படைவீடு : தஞ்சாவூர்ப் புறம்படி

இராசராசப் பிரம்ம மாராயப் படைவீடு

சோழ அரசர் பெயர்களில் ஆறுகள்
Rivers named after Chola Kings

1.	முடிகொண்ட சோழப் பேராறு	- Mudikonda Chola-p-peraru
2.	தண்பொருத்தமான முடிகொண்ட சோழப் பேராறு	- Tanporuttamana mudikondaChola p-peraru
3.	சுங்கத்தவிர்த்த சோழப் பேராறு	- Sunkatavirta chola-p-peraru
4.	அகளங்கப் பேராறு	- Akalanga p-peraru
5.	மதுராந்தக வடவாறு	- Madurantaka Vadavaru
6.	வீரசோழ வடவாறு	- Veera chola Vadavaru
7.	வீரராசேந்திர சோழ வடவாறு	- Veera Rajendra Chola Vadavaru
8.	விக்கிரமனாறு	- Vikramanaru
9.	கரிகால சோழப் பேராறு (கொள்ளிடம்)	- Karikala Chola -p -peraru (Kollidam)
10.	வீரசோழனாறு	- Veera Cholanaru

உலகளந்தான் கோல்

சோழ நாட்டின் நிலம் அனைத்தையும் துல்லியமாக அளக்கவும், அவற்றின் தரத்தை நிர்ணயிக்கவும், குரவன் உலகளந்தான் இராசராச மாராயன் என்பவன் தலைமையில் இராசராசன் ஒரு குழு அமைத்தான். இக்குழு தனது பணியைக் குறைவறச் செய்து அரசனின் பாராட்டைப் பெற்றது. நிலத்தை அளக்கப் பயன்படுத்தப்பட்ட பதினாறு சாண் நீளமுடைய கோல் "உலகளந்தான் கோல்" என்றழைக்கப்பட்டது.

தஞ்சை பெருங்கோயிலைக் கட்டிய சிற்பி

இப்பெருங்கோயிலை வீரசோழன் குஞ்சரமல்லனான இராசராசப் பெருந்தச்சன் என்ற சிற்பி கட்டியுள்ளான். இவனுக்கு உதவியாக குணவன் மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன் என்பவனும், இலத்திச் சடையனான கண்டராதித்த பெருந்தச்சன் என்பவனும் பணி புரிந்திருக்கிறார்கள். தற்காலத்தில் கோயில்களைக் கட்டும் சிற்பிகளை ஸ்தபதி என்கிறோம். சோழர் காலத்தில் சிறந்த சிற்பிகள் பெருந்தச்சன் என்று அழைக்கப்பட்டனர் என்பதைப் பல கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இராசராசனுடைய பெயர் பூண்டு ''இராசராசப் பெருந்தச்சன்'' என்று அழைக்கப்பட்ட வீரசோழன் குஞ்சரமல்லனே தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டிய தமிழகத்தின் தலையாய சிற்பியாவான்.

வாரியங்கள்

கிராம சபைகள் நிருவாக வசதிக்கு ஏற்ப பல வாரியங்களை அமைத்துக் கொண்டன. அவ்வாரியங்களின் பணிகள் ஊர்களின் தன்மைக்கு ஏற்ப அமைந்திருந்தன. சில ஊர்களில் ''சம்வத்சர வாரியம்'' என்ற ஒன்றே கிராமத்தின் அனைத்துப் பணிகளையும் கவனித்து வந்தது. பொதுவாக வாரியங்கள் ஊர் மக்களின் நலத்தையும், அறநிலையங்களையும் பாதுகாத்து வந்ததோடு மட்டுமின்றி ஏரி, ஊருணி, கிணறு, வாய்க்கால் போன்ற நீர் நிலைகளையும் செப்பனிட்டுப் பாதுகாத்து வந்தன. அரசுக்குச் சேர வரவேண்டிய வரிகளையும் மக்களிடமிருந்து வசூலித்து அரசுக்குச் செலுத்தி வந்தது. கல்வெட்டுகளின் மூலமாகக் கீழ்க்காணும் வாரியங்கள் இருந்தமை தெரிய வருகின்றது.

அவையாவன

1.	நில வாரியம்	7.	கழனி வாரியம்
2.	நீர் வாரியம்	8.	கணக்கு வாரியம்
3.	ஏரி வாரியம்	9.	கலிங்கு வாரியம்
4.	தோட்ட வாரியம்	10.	தடிவழி வாரியம்
5.	பொன் வாரியம்	11.	குடும்பு வாரியம்
6.	பஞ்ச வார வாரியம்	12.	சம்வத்சர வாரியம்

இராசராச ஈச்சுரத்தில் இராசராசன் எழுந்தருளுவித்த திருமேனிகள்

1. சீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கைத் தேவர்
2. தட்சிணமேரு விடங்கர்
3. ஆடவல்லான்
4. மகாமேரு விடங்கர்
5. மகாமேரு விடங்கர் நம்பிராட்டியார்
6. தஞ்சை விடங்கர்
7. சண்டேச்சுர பிரசாத தேவர்
8. பஞ்சதேக மூர்த்திகள்
9. சுப்பிரமணிய தேவர்
10. தட்சிணாமூர்த்திகள்
11. மகா விட்ணுக்கள் நம்பிராடியார்
12. சண்டேச்வர தேவர்
13. நிருத்தம் செய்தருளுகின்றாராகக் கனமாக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்
14. நின்றாராக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்
15. சுகாசனம் இருந்தாராக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்

இராசராசன் தஞ்சைக் கோயிலுக்கு அளித்த பொன்னாலான திருப்பரிகலன்கள்

இலைத்தட்டு	-	ILAITATTU
இலைச்செப்பு	-	ILAICCEPPU
ஈச்சொப்பிகை	-	ICCOPPIKAI
ஒட்டுவட்டில்	-	OTTUVATTIL
கலசம்	-	KALACAM
கலசப்பானை	-	KALACAPPANAI
கறண்டிகைச்செப்பு	-	KARANTIKAICEPPU
காளம்	-	KALAM
காளாஞ்சி	-	KALANCI
கிடாரம்	-	KIDARAM
குடம்	-	KUDAM
குறுமடல்	-	KURUMADAL
கெண்டி	-	KENDI
செப்புக் குடம்	-	CEPPUKKUDAM
தட்டம்	-	TATTAM
தளிகை	-	TALIKAI
தாரைதாள்வட்டில்	-	TARAITALVATTIL
படிக்கம்	-	PADIKKAM
மண்டை	-	MANDAI
மாநவட்டில்	-	MANAVATTIL
ஸ்ரீ பலித்தாலம்	-	SRIPALITTALAM

(இவை சிவபாதசேகரன், ஸ்ரீராஜராஜன் என்று பெயரிடப்பட்டன)

இராசராசசோழன் தஞ்சைக் கோயிலுக்கு அளித்த வெள்ளியாலான திருப்பரிகலன்கள்

இலைத்தட்டு	-	ILAITATTU
கச்சோளம்	-	KACCOLAM
கலசம்	-	KALACAM
கலசப்பானை	-	KALACAPPANAI
காளம்	-	KALAM
குடம்	-	KUDAM
குறுமடல்	-	KURUMADAL
நெடுமடல்	-	NETUMADAL
நெய்முட்டை	-	NEYMUTTAI
சட்டுவம்	-	CATTUVAM
செப்பு	-	CEPPU
தட்டம்	-	TATTAM
தளிகை	-	TALIKAI
படிக்கம்	-	PATIKKAM
பிங்காளம்	-	PINKALAM
மண்டை	-	MANDAI
மடல்	-	MATAL
மூக்குவட்டகை	-	MUKKUVATTAKAI
கைவட்டகை	-	KAIVATTAKAI
வட்டில்	-	VATTIL

(இவை சிவபாதசேகரன், ஸ்ரீராஜராஜன் என்று பெயரிடப்பட்டன)

இராசராசன் முன்னிலையில் நடந்த விற்போர்

இராசராசனே நேரில் கண்ட விற்போர் தஞ்சை மாவட்டம் கருந்தட்டான்குடி என்ற ஊரில் நடைபெற்றது. ஒருவன் இராசராச தேவர் சிறுதனத்துச் சிங்களாந்தகத் தெரிஞ்ச குதிரை சேவகர் படை என்ற குதிரைப் படைப் பிரிவைச் சேர்ந்த அரங்கன்காரியான சோழ விச்சாதர முத்தரையன். மற்றொரு வீரன் பெயர் காரிக்குளிப்பாகை. இவன் மலையப்படை இருமுடி சோழவீரன் படையைச் சேர்ந்தவன். இப்போரில் முதலாமவன் எறிந்த அம்பு துளைத்துக் காரிக் குளிப்பாகை இறந்தான்.

இராசராசனின் வீர வரலாற்றைக் கூறும் நூல்

வீரத்திற்கு இருப்பிடமான இராசராசனின் வீரவரலாற்றைக் கூறும் நூல் ஒன்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இந்நூலுக்கு ''இராசராச விசயம்'' என்று பெயர். இதனை நாராயணன் பட்டாதித்தன் இயற்றியதாகத் தெரிகிறது. திருவிழாக் காலங்களில் கோயிலுக்கு வரும் மக்களுக்கு இந்நூல் படித்துக் காண்பிக்கப்பட்டது. தமிழிலேயே இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம். மறைந்து போன தமிழ் நூல்களில் இதுவும் ஒன்றாகும்.

சோழர் காலத்துப் போர்க்களங்கள்

வ எண்	இடம்	சோழ மன்னர்	போரிட்ட மன்னர்
1.	குடமூக்கு (கும்பகோணம்)	சோழர் (விசயாலயன், ஆதித்தன்) பல்லவர், கங்கர், மகதர்	ஸ்ரீ மாற ஸ்ரீவல்லப பாண்டியன்
2.	திருப்புறம்பியம்	சோழர் (ஆதித்தன்) பல்லவர், கங்கர்	இரண்டாம் வரகுண பாண்டியன்
3.	தக்கோலம்	முதலாம் பராந்தகனின் மகன் இராசாதித்தன்	இராட்டிரகூடர் கங்கர்
4.	வெள்ளூர்	முதலாம் பராந்தகன்	இராசசிம்ம பாண்டியன், ஈழமன்னன்
5.	வல்லம்	முதலாம் பராந்தகன், கங்கன் இரண்டாம் பிரதிவிபதி	வாணன்
6.	சேவூர்	இரண்டாம் பராந்தகனின் மகன் ஆதித்த கரிகாலன்	வீரபாண்டியன்
7.	காந்தளூர்ச் சாலை	முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன்	
8.	கல்யாணபுரம்	முதலாம் இராசாதிராசன்	சாளுக்கியர்
9.	கொப்பம்	முதலாம் இராசாதிராசன் இரண்டாம் இராசேந்திரன்	சாளுக்கியர்
10.	பேராற்றங்கரை	இரண்டாம் இராசேந்திரன்	சாளுக்கியர்
11.	கம்பிலி	முதலாம் இராசாதிராசன்	சாளுக்கியர்
12.	கொல்லாபுரம்	முதலாம் இராசாதிராசன்	சாளுக்கியர்
13.	முடக்காறு	இரண்டாம் இராசேந்திரன்	சாளுக்கியர்
14.	கூடல் சங்கமம்	இரண்டாம் இராசேந்திரன்	சாளுக்கியர்
15.	நங்கலி	முதலாம் குலோத்துங்கன்	விக்ரமாதித்தன்
16.	விழிஞம்	முதலாம் குலோத்துங்கன்	சேரன்

சோழர் காலத்துப் போர்க்களங்கள்

வ எண்	இடம்	சோழ மன்னர்	போரிட்ட மன்னர்
17.	கோட்டாறு கலிங்கப் போர்	முதலாம் குலோத்துங்கன்	சேரன்
18.	தென் கலிங்கப் போர்	முதலாம் குலோத்துங்கன்	கலிங்க மன்னன்
19.	வட கலிங்கப் போர்	முதலாம் குலோத்துங்கன்	கலிங்க மன்னன் அனந்தவர்மன்
20.	ஈழ நாட்டுப் போர்	முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் முதலாம் இராசாதிராசன் முதலாம் குலோத்துங்கன் இரண்டாம் இராசேந்திரன்	ஈழ நாட்டு மன்னன்
21.	வேங்கி நாட்டுப் போர்	முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் முதலாம் குலோத்துங்கன்	கீழைச் சாளுக்கியர்
22.	பாண்டிய நாட்டுப் போர்	முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் முதலாம் இராசாதிராசன் முதலாம் குலோத்துங்கன் இரண்டாம் குலோத்துங்கன் மூன்றாம் குலோத்துங்கன்	பாண்டியர்

சோழர் காலத்தில் தஞ்சையில் மருத்துவமனை

தஞ்சையிலுள்ள பெருமாள் கோயிலில் முதலாம் இராசராசனின் தமக்கை குந்தவைப் பிராட்டியாரால் ஒரு மருத்துவமனை எடுப்பிக்கப்பெற்றது. இம்மருத்துவமனை ''சுந்தரசோழ விண்ணகர ஆதுலர் சாலை'' என வழங்கப்பெற்றது. இம்மருத்துவமனையை நிர்வகிக்கும் பொருட்டு வீட்டு மனைகளும், நிலமும் தஞ்சைக்கு அருகிலுள்ள பண்டாரவாடை என்னும் ஊரில் குந்தவைப் பிராட்டியாரால் கொடையாக அளிக்கப்பெற்றிருந்தன.

சோழர் கால ஓவியங்கள்

சோழர்காலப் புகழ்மிகு ஓவியங்களை முதலாம் இராசராசனின் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணலாம். இங்கு தீட்டப்பட்டுள்ள ஓவியங்களுள் கயிலைக் காட்சி, சுந்தரர் தடுத்தாட்கொண்ட வரலாறு, நாட்டிய மகளிர், திரிபுராந்தகர், இராவண அனுக்கிரகமூர்த்தி, சேரமான் பெருமாளும் சுந்தரரும் கயிலை செல்லுதல், மாமன்னன் இராசராசனும் கருவூர்த் தேவரும் போன்றவை ஓவியக் கலைக்கு இலக்கணம் கூறுபவை. கங்கைகொண்டசோழபுரம், பட்டீசுவரம், துக்காச்சி போன்ற இடங்களிலும் சோழர்கால ஓவிய எச்சங்கள் காணப்படுகின்றன.

சோழர் காலத்தில் உறுப்பினர்களுக்கான விதிமுறைகள்

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விதிகளை உத்திர மேரூர்க் கல்வெட்டு நமக்குத் தெரிவிக்கின்றது. அவ்விதிகளில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக்களையும் பொருட்டுச் சில மாற்றங்கள் செய்து, உறுப்பினர் ஆவதற்கு முன்பும், ஆன பின்பும் கடைப்பிடிக்க வேண்டிய புதிய விதிகளைச் சேய்ஞ்ஞலூர்க் கல்வெட்டு விளக்கிக் கூறுகின்றது. அவையாவன,

1. நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட முடியும்.

2. ஓராண்டில் உறுப்பினர் பதவியிலிருந்தவர் அடுத்த ஐந்தாண்டுகள் கழிந்த பின்னரே மீண்டும் போட்டியிட முடியும்.

3. பதவி வகித்தவரின் மகன் நான்கு ஆண்டுகள் கழிந்த பின்பும், உறவினர்கள் மூன்று ஆண்டுகள் கழிந்த பின்பும் போட்டியிடலாம்.

4. உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடும் ஒருவர், அரசு அதிகாரிகளின் துணைக் கொண்டு விதிமுறைகளுக்கு முரணாக நடந்தால் அவர்கள் ''அரசுத் துரோகிகள்'' என்று அழைக்கப்பட்டார். அத்துடன் அவரது சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தத்தமக்கு உரிய பணிகளைப் பொதுமக்களுக்குப் பாதிப்பு இன்றி நிறைவேற்ற வேண்டும்.

6. பொதுமக்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளைத் தவிர அதிகமாக பெறக்கூடாது.

7. ஒரே நேரத்தில் 2000 காசுகளுக்கு மேல் செலவிடக் கூடாது. அவ்வாறு செலவிட வேண்டியிருப்பின் மகாசபையின் அனுமதி பெற வேண்டும்.

8. விதிகளின்படிச் செலவு செய்யாமல் அதிகமாகச் செலவு செய்தாலோ, அதிக வரி வாங்கினாலோ அதற்குக் காரணமான உறுப்பினர் ஐந்து மடங்கு தண்டம் அளிக்க வேண்டும்.

9. செலுத்தப்படாமல் இருக்கின்ற அரசு வரியை இரண்டு மடங்கு தண்டத்தோடு வசூலித்தல் வேண்டும்.

10. இதற்கும் மேலாக வரி செலுத்தாதவரின் சொத்துக்களைக் கையகப்படுத்தவும் உறுப்பினர்க்கு அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

தேர்தலில் நிற்கத்

தகுதி உடையோர்	தகுதி அற்றோர்
1. 35 வயது முதல் 70 வயதுக்கு உட்பட்டவர்	ஏற்கனவே பணியிலிருந்து கணக்கு காட்டாதவர்
2. கல்வி அறிவுடன், வரிகட்டும் 1/2 வேலி (10 மா) நிலம் கொண்டவர்	பஞ்சமா பாதகம் செய்தவர்
3. செயலாக்கத் திறன் கொண்டவர்	பிறர் பொருளைத் திருடியவர்
4. நல்லொழுக்கம் உடையோர்	கையூட்டுப் பெற்றவர்
5. நற்குணமும் செல்வமும் உடையோர்	தவறுகள் செய்து தண்டனை பெற்றுப் பின் நல்லவரானோர்
6. ஐந்து ஆண்டுகளுக்குள் வாரியப் பணி புரியாதவர்	மேற்சொன்ன இவர்களின் ஆண், பெண் வழி உறவினர்கள்.

சோழர் காலத்து வரிகள்

1. அங்காடிப் பாட்டம்
2. இடைப்பாட்டம்
3. இலைக் கூலம்
4. இரவுவரி
5. இறை
6. ஈழம்
7. உல்கு
8. ஊரிடுவரி
9. எச்சோறு
10. ஏரிப்பாட்டம்
11. ஓடக்கூலி
12. கண்ணாலக்காணம்
13. காவேரிக்கரை விநியோகம்
14. குசக்காணம்
15. குடிமை
16. சபாவினியோகம்
17. சித்தாயம்
18. சில்லிறை
19. சில்வரி
20. செக்கிறை
21. தட்டார்ப்பாட்டம்
22. தரகு
23. தறியிறை
24. நாடுகாவல்
25. நீர்க்கூலி
26. பாடிகாவல்
27. பூட்சி
28. போர்வரி
29. மரமஞ்சாடி
30. மாவிறை
31. மனை இறை
32. மீன் பாட்டம்
33. வண்ணாரப்பாறை

உழவு தொடர்பான பண்டைய வரிகள்

REVENUE INCOME THROUGH AGRICULTURE

அப்புவரி	-	APPUVARI
அரிசிக்காணம்	-	ARICI-K-KANAM
அறிவாட்பதக்கு	-	ARIVATPADAKKU
ஆடிப்பச்சை	-	ADIPPACCAI
ஆற்றுப்பாட்டம்	-	ARRUPPATTAM
உழவிறை	-	ULAVIRAI
ஏத்தக்காணம்	-	ETTAKKANAM
ஏர்க்காசு	-	ERKKASU
ஏரி ஆயம்	-	ERIAYAM
ஏரிப்பாசிவிலை	-	ERIPPASIVILAI
ஏரிமீன் பாட்டம்	-	ERIMEENPATTAM
ஏரில் ஒரு காசு	-	ERIL ORUKASU
கடமை	-	KADAMAI
கதிர்க்காணம்	-	KATIRKKANAM
கமுகுக் கடமை	-	KAMUKU KADAMAI
காணி இறை	-	KANI IRAI
கார் கடமை	-	KARKADAMAI
காத்திகைப் பச்சை	-	KARTHIGAIPPACCAI
கிடைக் காசு	-	KIDAIKKASU

கீழ்வாரம்	-	KILVARAM
குடநாழி	-	KUDANALI
குடிமை	-	KUDIMAI
கொடிக்கடமை	-	KODIKKADAMAI
கொழு	-	KOLU
கோல்வரி	-	KOLVARI
செங்கொடிக் காணம்	-	CENKOTIKKANAM
செந்நீர மஞ்சி	-	CENNIRAMANJI
சென்னீர் வெட்டி	-	CENNIR VETTI
நிலக்கடமை	-	NILAKKADAMAI
நீர்விலைக் காசு	-	NIRVILAIKKASU
நீராணிக்க வரி	-	NIRANIKKA VARI
பயிர்க்கடமை	-	PAYIRKKADAMAI
பாசிப்பாட்டம்	-	PACIP PATTAM
மூங்கில் வரி	-	MUNKIL VARI
வட்டி நாழி	-	VATTI NALI
வெற்றிலைத் தரகு	-	VERRILAI TARAKU

அரச குலத்தவர் பெயரில் வாய்க்கால்கள்
Irrigation Canals named after Royal Family

1.	அருமொழித்தேவ வாய்க்கால்	- Arumolideva Vaykkal
2.	அரிஞ்சிகை வாய்க்கால்	- Arinjikai Vaykkal
3.	இராசகேசரி வாய்க்கால்	- Iracakesari Vaykkal
4.	இராசாதிராச சோழ வாய்க்கால்	- Iracatiraca chola Vaykkal
5.	இராஜேந்திரசோழ வாய்க்கால்	- Iracentirachola Vaykkal
6.	உத்தமசீலி வாய்க்கால்	- Uttamacili Vaykkal
7.	உத்தமசோழ வாய்க்கால்	- Uttamachola Vaykkal
8.	கங்கைகொண்ட சோழ வாய்க்கால்	- Gangaikontachola Vaykkal
9.	கேரளமாதேவி வாய்க்கால்	- Keralamadevi Vaykkal
10.	கோதண்டராம வாய்க்கால்	- Kotandarama Vaykkal
11.	சீபூதி வாய்க்கால்	- Ciputi Vaykkal
12.	சுங்கந்தவித்த சோழ வாய்க்கால்	- Sunkantavittachola Vaykkal
13.	சுந்தரசோழ வாய்க்கால்	- Sundarachola Vaykkal
14.	செம்பியன்மாதேவி வாய்க்கால்	- Sembiyanmadevi Vaykkal
15.	செனநாத வாய்க்கால்	- Cenanata Vaykkal
16.	சோழகுல வாய்க்கால்	- Cholakula Vaykkal
17.	சோழசூளாமணி வாய்க்கால்	- Cholaculamani Vaykkal
18.	நித்தவினோதன் வாய்க்கால்	- Nittavinotan Vaykkal
19.	பரசக்கர தட்ட வாய்க்கால்	- Paracakkara tatta Vaykkal

20. பரமேச்சுவர வாய்க்கால் - Parameccuvara Vaykkal

21. பராந்தகன் வாய்க்கால் - Parantakan Vaykkal

22. மாதேவன் வாய்க்கால் - Madevan Vaykkal

23. மாதேவி வாய்க்கால் - Madevi Vaykkal

24. முடிகொண்டசோழ வாய்க்கால் - Mudikondachola Vaykkal

25. வானவன்மாதேவி வாய்க்கால் - Vanavanmadevi Vaykkal

26. விமலாதித்த வாய்க்கால் - Vimalatitta Vaykkal

27. வீரசோழ வாய்க்கால் - Virachola Vaykkal

28. வீரநாராயண வாய்க்கால் - Viranarayana Vaykkal

29. ஜயங்கொண்டசோழ வாய்க்கால் - Jayankondachola Vaykkal

30. ஸ்ரீ அறிஞ்சிகை வாய்க்கால் - Sri Arinjikai Vaykkal

31. ஸ்ரீ கண்ட வாய்க்கால் - Sri Ganda Vaykkal

32. ஸ்ரீ கண்டராதித்த வாய்க்கால் - Sri Gandaratitta Vaykkal

33. ஸ்ரீ செம்பியன்மாதேவி வாய்க்கால் - Sri Sembiyanmadevi Vaykkal

34. ஸ்ரீ பராந்தக வாய்க்கால் - Sri Parantaka Vaykkal

தெய்வப் பெயர்களில் வாய்க்கால்கள்
Irrigation Canals named after Dieties

1. ஆழி வாய்க்கால் - Aali Vaykkal
2. இறையான் வாய்க்கால் - Iraiyan Vaykkal
3. கணபதி வாய்க்கால் - Ganapati Vaykkal
4. கருமாணிக்க வாய்க்கால் - Karumanikka Vaykkal
5. கேசவ வாய்க்கால் - Kesava Vaykkal
6. சரஸ்வதி வாய்க்கால் - Sarasvathi Vaykkal
7. சுப்ரமணிய வாய்க்கால் - Subramanya Vaykkal
8. திருவேங்கட வாய்க்கால் - Tiruvenkata Vaykkal
9. தில்லை விடங்க வாய்க்கால் - Tilli Vitanka Vaykkal
10. பரமேஸ்வர வாய்க்கால் - Paramesvara Vaykkal
11. பற்பநாம வாய்க்கால் - Parpanama Vaykkal
12. பார்வதி வாய்க்கால் - Parvathi Vaykkal
13. வள்ளி வாய்க்கால் - Valli Vaykkal
14. வீரேச்சுவர வாய்க்கால் - Veereswara Vaykkal
15. ஸ்ரீ தேவி வாய்க்கால் - Sri Devi Vaykkal
16. ஸ்ரீ புருஷோத்தம வாய்க்கால் - Sri Purushottama Vaykkal
17. ஸ்ரீ மாதவ வாய்க்கால் - Sri Madava Vaykkal

அரச குலத்தவர், தெய்வப் பெயர்களில் வதிகள் (வடிகால் வாய்க்கால்)

Vatis (Drainage-Canals) named after Royal Family and Dieties

அ

1. அமநிநாராயண வதி - Amaninarayana vati
2. ஆதித்த வதி - Attitta vati
3. இராசகேசரி வதி - Iracakesari vati
4. கண்டருள்கண்ட வதி - Kandarulkanda vati
5. கன்னர வதி - Kannaravati
6. கிடாரங்கொண்ட சோழவதி - Kidarankonda chola vati
7. குலோத்துங்கசோழ வதி - Kulothunga chola vati
8. சோழகுலவல்லி வதி - Cholakullavalli vati
9. சோழமாதேவி வதி - Cholamadevi vati
10. திரிபுவன மாதேவி வதி - Tiripuvana madevi vati
11. நரதொங்க வதி - Naratonga vati
12. பஞ்சவன்மாதேவி வதி - Panchavanmadevi vati
13. பரமேஸ்வர வதி - Parameswara vati
14. பராக்கிரம வதி - Parakkirama vati
15. மதுராந்தக வதி - Madurantaka vati
16. மாதேவடிகள் வதி - Madevatikal vati
17. மும்முடிச்சோழ வதி - Mummutichola vati
18. வயிரமேக வதி - Vayirameka vati
19. வானவன் வதி - Vanavan vati
20. விடேல் விடுகு வதி - Videlviduku vati

அரச குலத்தவர் தெய்வப் பெயர்களில் வதிகள் (வடிகால் வாய்க்கால்)

Vatis (Drainage-Canals) named after Royal Family and Dieties

அ

21. வீரநாராயண வதி - Viranarayana vati
22. ஜநநாத வதி - Jananatha vati
23. ஸ்ரீகண்டராதித்த வதி - Srikandaratitta vati
24. ஸ்ரீகொந்தகமாதேவி வதி - Srikondakamadevi vati
25. ஸ்ரீசெம்பியன்மாதேவி வதி - Srisembiyanmadevi vati
26. ஸ்ரீராஜகேசரி வதி - Sri rajakesari vati
27. ஸ்ரீவானவன்மாதேவி வதி - Sri Vanavanmadevi vati
28. ஸ்ரீவீரநாராயணன் வதி - Sri Viranarayana vati

ஆ

1. கவுசல வதி - Kavucala vati
2. காமதேவ வதி - Kamadeva vati
3. சங்கர வதி - Sankara vati
4. திருச்சிற்றம்பல வதி - Tiruccirrambala vati
5. திருவரங்க வதி - Tiruvaranka vati
6. ஸ்ரீதர வதி - Sridara vati
7. பெருமாள் வதி - Perumal vati
8. ஸ்ரீதேவி வதி - Sridevi vati
9. ஸ்ரீகாமுக வதி - Srikamuka vati
10. ஸ்ரீவீரகாமுக வதி - Srivirakamuka vati

சோழர் காலத்துப் பெரும் புலவர்கள்

1. நம்பியாண்டார் நம்பி	-	முதலாம் இராசராசன் காலம்
2. செயங்கொண்டார்	-	முதலாம் குலோத்துங்கன் காலம்
3. ஒட்டக்கூத்தர்	-	விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் காலம்
4. கம்பர்	-	
5. சேக்கிழார்	-	
6. புகழேந்தி	-	
7. திருத்தக்க தேவர்	-	

உரையாசிரியர்கள்	**புலவர்கள்**
1. அடியார்க்கு நல்லார்	1. கருவூர்த் தேவர்
2. இளம்பூரணர்	2. கண்டராதித்த சோழர்
3. சேனாவரையர்	3. திருமாளிகைத் தேவர்
4. தெய்வச்சிலையார்	4. சேந்தனார்
5. நச்சினார்க்கினியர்	5. பூந்துருத்தி நம்பிகாட நம்பி
6. பரிமேலழகர்	6. வேணாட்டடிகள்
7. பேராசிரியர்	7. திருவாலியமுதனார்
	8. புருடோத்தம நம்பி
	9. சேதிராயர்
	10. நெற்குன்றவாணர்
	11. நம்பிகாளி

சோழர் காலத்து இலக்கியங்கள்

1. சீவகசிந்தாமணி
2. நீலகேசி
3. வளையாபதி
4. கம்பராமாயணம்

பரணி :

1. கலிங்கத்துப் பரணி
2. கொப்பத்துப் பரணி
3. தக்கையாகப் பரணி

கோவை :

1. குலோத்துங்கன் கோவை
2. தஞ்சைவாணன் கோவை
3. திருச்சிற்றம்பலக் கோவை
4. நாலாயிரக் கோவை

நாடகங்கள் :

1. இராசராசேச்சுர நாடகம்
2. இராசராச விசயம்
3. வீரசோழ அணுக்க விசயம்

உலா :

1. மூவருலா
2. சங்கர சோழனுலா

அந்தாதி :

1. சிராப்பள்ளியந்தாதி

புராணம் :

1. கன்னிவன புராணம்
2. கரூவூர்ப் புராணம்
3. திருத்தொண்டர் புராணம்

பிற இலக்கியங்கள் :

1. திருவிசைப்பா
2. திருப்பல்லாண்டு
3. அரும்பைத் தொள்ளாயிரம்
4. ஈட்டி எழுபது
5 ஏர் எழுபது
6. கல்லாடம்
7. சிலை எழுபது
8. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
9. நளவெண்பா

5. தஞ்சை பெரிய கோயிலின் மாதிரி அமைப்பு (Model)

இராசராசசோழன் எடுப்பித்த கலையழகு மிக்க கற்றளி தமிழர்களின் கட்டடக்கலைச் சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இக்கோயில் கருவறை அமைப்பின் மாதிரி தோற்றம் இக்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறையின் திருச்சுற்றில் சோழர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. ஓவியக் காட்சிகளாக சுந்தரமூர்த்தி நாயனார், தடுத்தாட்கொண்ட வரலாறு, சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயம் செல்லுதல், தேவ கன்னியர்கள் நடனமாடுதல், இராசராசனும் கருவூர் தேவரும் போன்ற ஓவியங்கள் சோழர்கால ஓவியங்களைப் போன்றே தீட்டப்பட்டு கண்களுக்குக் காட்சியாய் விளங்குகின்றன.

6. கல்வெட்டுகள்

சோழர்கால வரலாற்றுச் சிறப்பை எடுத்துக்கூறும் சில கல்வெட்டுகள் இக்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட கற்கள் பல இடங்களில் சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1. தஞ்சை நகரில் பூமிக்கடியிலிருந்து கிடைத்த இராசராசனின் புகழ்பாடும் வடமொழி கல்வெட்டு இடம் பெற்றுள்ளது.

2. திருவிடைமருதூர் கோயிலுக்கு கொடையளிக்கப்பட்ட நிலத்தின் பெயர், அளவு, விலைபெறப்பட்ட விபரம் குறிக்கும் தூண் கல்வெட்டு (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) இங்கு இடம் பெற்றுள்ளது.

3. திருவிடைமருதூர் கோயிலுக்கு 353 குழி அளவு உடைய நிலத்தின் விபரத்தைக் குறிக்கும் கல்வெட்டு (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) ஒன்றும் இங்கே இடம்பெற்றுள்ளது.

4 மற்றொரு தூண் கல்வெட்டும் (திருவிடைமருதூரைச் சேர்ந்தது) காட்சியில் இடம்பெற்றுள்ளது.

5. செந்தலையிலிருந்து கிடைத்த கல்வெட்டில் கண்டன் மாறம்பாவை என்ற அரசியின் பெயரும், ஸ்ரீகண்டபுரம் என்ற ஊரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.

7. சிலம்புகள்

தமிழர்களது பண்டைய வீரவிளையாட்டுகளில் சிலம்பு விளையாட்டு ஒன்று. இது குச்சி விளையாட்டு, கழி விளையாட்டு, மான் கொம்பு விளையாடும் மடு விளையாட்டு, சுருள் கத்தி கொண்டு விளையாடும் சுருள் வீச்சு, தீ பந்து விளையாட்டு, புலியாட்டம் போன்ற பல்வேறு தமிழரது விளையாட்டுகளில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் உள்ள காவியத்தலைவர்கள் இதனைக் கற்று வந்துள்ளனர். அழகர் கோயிலில் உள்ள கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமாயண ஓவியத்தில் இராமன், இலக்குமணன் சிலம்பாட்டம், குதிரையேற்றம், யானையேற்றம் போன்ற விளையாட்டுகள் கற்றுக்கொள்வது போல ஓவியங்கள் உள்ளன.

அதில் சிலம்பாட்டம் கற்றுக் கொள்ளும் இராமன் இலக்குவனது கைகளில் இது போன்ற சிலம்புகள்தான் காட்டப்பட்டுள்ளன.

மராட்டியர் சிற்பங்களிலும் சிலம்பையேந்தி ஆடும் கலைஞர்களைக் காண்கிறோம். இன்று பொதுமக்களிடையே சிலம்பாட்டம் என்று குறிப்பிடுவது இத்தகைய சிலம்பைத்தான் என்பது உறுதிபடுகிறது. கி.பி. 16-17 -ஆம் நூற்றாண்டிலிருந்து இத்தகைய சிலம்புகள் வீர விளையாட்டுகளிலும் கிராம தெய்வங்களுக்கு விழாக்கள் எடுக்கும்போது அத்தெய்வங்களின் முன்பு அருள் வருவதற்காகவும், தாரை, தப்பட்டை போன்ற இசைக்கருவிகளுடன் சிலம்பாட்டக்காரர்கள், இச்சிலம்பினை ஏந்தி ஆடிவருவது இன்றும் வழக்கமாக உள்ளது.

பூசாரிகள் இதனை கையில் பிடித்தவண்ணம், பாடி ஆடுவதும் வழக்கமாகக் காண்கிறோம். தஞ்சை மாவட்டம், தென்னாற்காடு, காஞ்சி ஆகிய மாவட்டங்களில் இன்றும் சிலம்பாட்டங்களைக் காணலாம்.

கிராமக் கோயில்களில் இன்றும் பல்வேறு இசைக் கருவி களோடு இச்சிலம்பினையும் வைத்துள்ளனர்.

இச்சிலம்பு கால் சிலம்பினைப் போன்ற வடிவில் பெரியதும் சிறியதுமாக அமைந்து காணப்படுகிறது. இது நீண்ட நீள்வட்ட வடிவில் உட்புறம் உலோகப்பரல்கள் வைக்கும் வகையில், உட்கூடுடன் பொள்ளலாகக் காணப்படுகிறது. உட்கூட்டில் 50, 100க்கு மேல் உலோகப் பரல்கள் அதன் உள் அளவுக்கு ஏற்றவாறு வைப்பது வழக்கம்.

இதனுடைய ஒலி வெளியில் எழுவதற்கு இந்த சிலம்பின் கீழ்புறம் நீள்வட்டமாக ஓட்டையிட்டு ஆங்காங்கே உலோக இணைப்புகளுடன் சிலம்பினை அமைத்துள்ளனர்.

உருளை வடிவான நீள்வட்டச் சிலம்பின் நான்கு பக்கங்களிலும் உலோக பூக்கள் பதிக்கப்பட்டுள்ளன. பின்புறம்

இலைகளுடன் கூடிய சிறிய உலோகக் காப்பும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சிலம்புகள் கி.பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்தவை.

16 செ.மீ நீளம், 9.5 செ.மீ அகலம் கொண்ட சிறிய சிலம்பும், 24 செ.மீ நீளம் 14.5 செ.மீ அகலம் 12 செ.மீ சுற்றளவு கொண்ட பெரிய சிலம்பும் இக்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது.

8. காசுகள்

அன்றாடு நற்காசு, பழங்காசு, அன்றாடு நற்பழங்காசு, மதுராந்தகன் மாடை, கருங்காசு, ஈழக்கருங்காசு என்றவாறு காசுகள் சோழர் காலத்தில் வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஈழக்காசு என அழைக்கப்பட்ட சோழர் காலத்துக் காசுகளில் ஒருபுறத்தில் ஒரு மனித உருவம் நின்று கொண்டிருப்பது போலவும், மறுபக்கத்தில் அதே உருவம் அமர்ந்திருப்பது போலவும் காண்பிக்கப்பட்டுள்ளன. இராசராச சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட இத்தகைய ஈழக்காசுகளில் 'ஸ்ரீராசராச' என நாகரி எழுத்துகளில் பொறிக்கப்பெற்றுக் காட்சிப்பேழை ஒன்றுக்குள் அழகுறக் குவித்து வைக்கப் பட்டுள்ளன. அருகில் சோழர் காலத்தைச் சேர்ந்த பணச்சொம்பு என்று அழைக்கப்பட்ட பல்வேறு அளவுகளுடன் கூடிய சேமச் செப்புகள் சிலவும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கங்கைகொண்ட சோழன், உத்தம சோழன் என நாகரி எழுத்துகளில் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள், குலோத்துங்க சோழன் வெளியிட்ட தங்கக் காசு முதலியவற்றின் மாதிரிகள் இடம்பெற்றுள்ளன. எழுத்துப் பொறித்த காசுகளின் மறுபுறம் புலி, இரட்டை மீன், வில் முதலியன பொறிக்கப்பட்டுள்ளன.

9. அகழாய்வில் கிடைத்த பொருட்கள்

சோழர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த பழையாறை, கங்கைகொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த சோழர் காலத்தைச் சேர்ந்த அரும்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தைச் சேர்ந்த சுடுமண் காதணிகள், சுடுமண் பொம்மைகள், சுடுமண் சதுரங்கக் காய்கள், சுடுமண்ணாலான விளையாட்டுக் கருவிகள், சுடுமண் கெண்டி, அலங்காரப் பானை ஓடுகள், விலை உயர்ந்த கல் மணிகள், காசுகள் வார்த்தெடுக்கும் கருவி, கங்கைகொண்டசோழபுரம் அரண்மனையில் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய செங்கற்கள், ஓடுகள், இரும்பு ஆணிகள் முதலியன இடம்பெற்றுள்ளவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

இராசராசசோழனின் மகன் இராசேந்திரசோழன் 'கங்கையும் கடாரமும் கைக்கொண்டு சிங்காதனத்திருந்த செம்பியர்கோன்' என்று கல்வெட்டுகளில் புகழப்பெறும் பெருமன்னனாக விளங்கினான். இவன் காலத்தில் கங்கைகொண்டசோழபுரம் சோழர்களின் இரண்டாவது தலைநகரமாக விளங்கியது. கங்கையின் வெற்றிக்குப் பிறகு இப்பகுதியில் ஒரு பெரும் நகரை நிர்மாணித்துக் கோயிலை எடுப்பித்துத் தன் வெற்றியின் நினைவாக 'கங்கை கொண்ட சோழபுரம்' எனப் பெயரிட்டான்.

இப்பெரிய நகரம் தற்போது அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் உள்ளது. இப்பெரிய நகரம் தற்போது ஆயுதகளம், இடைக்கட்டு, உட்கோட்டை, கொல்லாபுரம், மெய்க்காவல்புத்தூர், வீரசோழநல்லூர் என்ற பெயரில் பல சிற்றூர்களாகப் பிரிந்து காணப்படுகிறது.

உட்கோட்டை கிராமத்தில் மாளிகைமேடு என்ற பெயரில் ஒரு பழமையான இடம் இருந்தது. தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை இப்பகுதியில் மூன்றுமுறை அகழாய்வு மேற்கொண்டது. அகழாய்வின் பயனாக அங்கு சோழமன்னன் இராசேந்திரனின் அரண்மனைப் பகுதியின் அடித்தளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அடித்தளம் இரட்டைச் சுவர் அமைப்புடன் அகலமாகக் காணப்படுகிறது. எனவே இவ்வரண்மனை பல நிலை மாடிகள் உடையதாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இவ்வகழாய்வு அக்காலத்தில் பயன்படுத்திய செங்கற்களையும், கல் கட்டுமானத்தையும், ஓடுகளின் வகைகளையும், தூண்களின் அமைப்புகளையும் அறிந்து கொள்ளத் துணை செய்கிறது.

இவ்வரண்மனைப் பகுதியை அகழாய்வு செய்தபோது அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொல்பொருட்கள் பல கிடைத்துள்ளன. அவற்றுள் சங்குகளால் ஆன பொருட்கள், தந்தத்தாலான யாளி உருவங்கள், காசுகள், சீன நாட்டுப் பானை ஓடுகள், இரும்பு ஆணிகள், மட்கலங்கள் விலையுயர்ந்த கல்மணிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

தஞ்சை பெரியகோயிலில் உள்ள சோழர் கால ஓவியத்தில் பல மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று தட்டையான ஓடுகள் வேய்ந்த கூரையுடன் காணப்படுகிறது.

அகழாய்வில் வெளிப்பட்ட அரண்மனையின் அடித்தளப் பகுதி, மாதிரி வடிவமாக இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 மீட்டர் சதுரத்தில் மாதிரி வடிவம் காணப்படுகிறது. அரண்மனை அடித்தளத்தின் மேற்பகுதியில் சுமார் 40 தூண்கள் இருந்ததற்கான அடையாளங்கள் கிடைத்துள்ளன. சுவர் இரண்டு நிலைகளில் காட்டப்பட்டுள்ளது. கீழ் அடுக்கு பெருத்தும், மேல் அடுக்கு சற்று சிறுத்தும் காணப்படுகிறது. கீழ் அடுக்கில் இருபது வரிசை செங்கற்கள் வைத்து கட்டப்பட்டு, மேல் அடுக்கில் பதினேழு வரிசை செங்கற்கள் கொண்டு கட்டப்பட்டு அழகாக விளங்குகிறது.

10. போர்க்கருவிகள்

பண்டைய தமிழர்களின் வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சில போர்க்கருவிகளும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

1. கட்டாரி
2. ஈட்டி
3. போர்வாள்கள்

11. விளக்குகள்

இலக்கியங்களில் பண்டைய தமிழ் மக்கள் பயன்படுத்திய விளக்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆதிச்சநல்லூர் அகழாய்வில் 2,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட உலோகத்தால் ஆன விளக்குகள் கிடைத்துள்ளன. கல்லாலும் மண்ணாலும், உலோகத்தாலும் விளக்குகள் உருவாக்கப்பட்டன. அகழாய்வுகளில் பல்வேறு வகையான பண்டைய விளக்குகள் கிடைத்துள்ளன. அவை அக்காலத்திய விளக்கு வடிவங்களை நாம் அறிந்து கொள்வதற்கு நன்கு துணை செய்கின்றன.

தமிழ்நாட்டு ஆலயங்களில் வழிபாட்டிற்குரிய விளக்குகள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது. இப்பெயர்கள் வழிபாட்டு முறைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. அன்ன விளக்கு, அகல் விளக்கு, அலங்கார விளக்கு, குத்து விளக்கு, நுந்தா விளக்கு, கை விளக்கு, குதிரை விளக்கு, சிம்ம விளக்கு, தூண்டா விளக்கு, தொங்கு விளக்கு, நந்தி விளக்கு, நட்சத்திர விளக்கு, புருஷா விளக்கு, மாட விளக்கு எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது.

கல்வெட்டுகளில் சந்தி விளக்கு, நொந்தா விளக்கு ஆகிய விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. இறைவன் அருகில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும் விளக்கு நொந்தா விளக்கு எனப் பெயர் பெற்றது. காலை, மாலை ஆகிய இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும் விளக்கு சந்தி விளக்கு எனப்பட்டது.

அரசர்களும், அரசமாதேவிகளும் தங்கள் பிறந்த நாளிலும், மங்கல நாளிலும் பல விளக்குகளை வெள்ளியிலும், செம்பிலும் செய்து அளித்து வந்துள்ளனர். பெருமக்களும், பொதுமக்களும் விளக்கு தானம் அளித்து வந்துள்ளதைக் கல்வெட்டுகள் விவரித்துக் கூறுகின்றன.

கோயில் விளக்குகளுக்காக அளிக்கப்பெற்ற நிலம் 'திரு விளக்குப்புறம்' என அழைக்கப்பட்டது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு ஐந்து நிலைக் குத்துவிளக்கு, மூன்று நிலைக் குத்துவிளக்கு கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. திருமணஞ்சேரி கோயிலுக்குத் 'தொங்கும் விளக்கு' ஒன்று அளிக்கப்பெற்றதை மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

இராசராசனின் தேவியான உலகமாதேவி திருவையாறு கோயிலுக்கு இழச்சியல் விளக்கு, மலையான்சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, ஆர்க்குட விளக்கு, அனந்தலை விளக்கு ஆகிய விளக்குகளை அளித்தாள் என அவற்றின் துல்லியமான எடைகளோடு கல்வெட்டுகள் குறிக்கின்றன.

திருவாரூர்த் திருக்கோயிலில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் அணுக்கியராக ஆடல்பணி புரிந்த ஒரு பெண்மணி 'நக்கன் பரவை நங்கை' என்பவள் நாட்டை ஆண்ட மன்னன் இராசேந்திரனின் மனங்கவர்ந்தவள். ஆரூரன் திருக்கோயிலுக்கு மாமன்னன் இராசேந்திரனும், பரவை நங்கையும் தேரில் பவனி வந்து கோயிலுக்குள் நுழைந்து இறைவன் முன்பு வணங்கி நின்றனர். அவர்கள் நின்று வணங்கிய இடத்தின் நினைவாக ஒரு குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்பட்டது. 'உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவரும் அணுக்கியார் பரவை நங்கையாரும் நிற்கும் இடம் தெரியும் குத்துவிளக்கு ஒன்றும்' எனக் கல்வெட்டு குறிக்கிறது. இதைத் தவிர 15,570 பலம் எடையுள்ள 28 பிரம்மாண்டமான குத்துவிளக்குகளை அளித்தாள். பரவை நங்கை, 'பச்சைப் பாவை உமை நங்கை', 'பாவைசரியா முலை நங்கை' எனப் பெயரிட்ட இரண்டு பாவை விளக்குகளையும் அளித்துள்ளாள். எனவே அக்காலத்தில் பல விளக்குகள் பெயரிடப்பட்டு வழக்கத்தில் இருந்து வந்துள்ளதைக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. இவ்வாறு காலந்தோறும் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட விளக்குகள் சிலவற்றை இங்கு காணலாம். இவை சிதம்பரம் 'இளமையாக்கினார் கோயிலுக்கு' உரியவை. சுமார் நூறு ஆண்டுகளுக்கு

முற்பட்டவை. இவ்விளக்குகளில் அக்கோயிலின் பெயரும் அவ்விளக்குகளின் எடையும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் வழிபாட்டில் விளக்குகள்

ஆலய வழிபாட்டில் பல வகைகள் உள்ளன. அவற்றில் ஒன்று சோடசோபசாரம் ஆகும்.

1. ஆவாகனம், 2. தாபனம், 3. பாத்யம் கொடுத்தல், 4.ஆசனம் கொடுத்தல், 5. அர்க்கியம் கொடுத்தல், 6. அபிஷேகம், 7. உடை, சந்தனம், 8. புட்பார்ச்சனை, 9. தூபதீபம், 10.நைவேத்தியம், 11. பலிபோடுதல், 12. ஓமம், 13. ஸ்ரீபலி, 14. கேயம்வாத்தியம், 15. நர்த்தனம், 16. உத்வாசனம் எனப் பதினாறு வகை வழிபாட்டு முறைகளாக ஆத்மசாத்திர நூலில் குறிக்கப்பட்டு உள்ளது. இவ்வகை வழிபாட்டில் 1. குடை, 2.கொடி, 3. விசிறி, 4. கண்ணாடி, 5. சுருட்டி, 6. அப்தாகிரி, 7.சாமரம், 8. அர்க்கிய பாத்திரம், 9. தீபம், 10. தூபம், 11. நாகதீபம், 12. யானைதீபம், 13. அலங்காரதீபம், 14. ரிசபதீபம், 15.அன்னதீபம், 16.புருசதீபம், 17. குதிரைதீபம், 18. மயில்தீபம், 19.அலங்காரதீபம், 20.சிங்கதீபம், 21. ஐந்து தட்டுடன் கூடிய பூரண கும்பம், 22.கோலதீபம், 23. நட்சத்திரதீபம், 24. கற்பூர ஆரத்தி, 25. மேருதீபம், 26. ஏழுகிளைக் கற்பூர ஆரத்தி போன்றவை கொண்டு பூசை முறைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

12. ஒளி ஒலி காட்சி (Sound and Light Show)

இராசராசசோழன் வெற்றிகள், உலகளந்த நிகழ்ச்சி, பெரிய கோயிலைக் கட்டுதல், தில்லையில் தேவாரச் சுவடிகளை வெளி கொணர்தல், நாட்டிய மகளிர்களைக் கோயில் பணிக்காக அமர்த்துதல், பௌத்த விகாரம் கட்ட அனுமதி அளித்தல் போன்ற அரிய வரலாற்றுச் செய்திகள் ஒளி-ஒலி காட்சி பேழையில் அமைக்கப்பட்டு, பார்ப்போரின் கருத்தை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

இராசராசசோழனின் ஆட்சி பரப்பு, இராசேந்திரசோழனின் ஆட்சி பரப்பு, சாரங்கபாணி கோயிலில் உள்ள நடனச் சிற்பங்கள் ஆகியவை வண்ண ஒளிபெட்டியாக காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன.

13. சிற்பங்கள்

சோழர் கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கும் அரிய பல கற்சிற்பங்கள் இக்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. ''கல்லும் சொல்லாதோ கவி'' என்ற புகழுரைக்கு ஏற்ப இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் சிற்பங்களின் அழகுத்தோற்றம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வரிசையாக வைக்கப் பட்டிருக்கும் சிற்பங்களை இக்கையேடு விரிவாக கூறுகிறது.

சதுர்புஜ சண்டிகேசுவரர்
உயரம் 94 செ.மீ. அகலம் 54 செ.மீ.
சிதம்பரம்

இவ்வுருவம் செவ்வக வடிவான இருக்கையின் மீது வலது காலை மடித்து, இடது காலைத் தொங்கவிட்டு நான்கு

கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. மேல் வலக்கை மழுவாயுதத்தை கடக முத்திரையில் பற்றியுள்ளது.மேல் இடக்கை மலரை ஒத்த பொருளைப் பற்றியுள்ளது. கீழ்வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. கீழ் இடக்கை தொடை மீது உள்ளது. தலையில் விரிந்த சடாபாரம் அலங்கரிக்கின்றது. மேல்நெற்றியைச் சுற்றிலும் கண்ணிமாலை காட்டப்பட்டுள்ளது. காதுகளில் ஓலைக் குழைகள் அணி செய்கின்றன. கழுத்தில் பிறை வடிவான அணியும், மணிவடமும் அலங்கரிக்கின்றன. இடது மார்பில் பூநூலும், மேல் வயிற்றில் உதரபந்தமும், இடையிலிருந்து மேல் தொடை வரை கீழாடையும்,தொடைமீது தொங்கும் இடைவாரும் இவ்வுருவத்தை அலங்கரிக்கின்றன.

இவ்வுருவத்தின் முகத்தில் ஆழ்ந்த அமைதி தவழ்கிறது. வட்டமான முகமும், நீண்ட மூக்கும், குவிந்த திருவாயும், தடித்த உதடுகளும், அளவான உடல்வாகும் பெற்று விளங்குகின்றன. இவ்வுருவம் சாம்பல் நிறக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இக்கல்லின் முன்புறம் சிற்ப வடிவமும், பின்புறம் எளிய பலகையை ஒத்து தட்டையாகக் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உருவ அமைதி, ஆடை அணிகலன்கள், ஆயுதத்தின் தன்மை யாவும் கொண்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சதுர்புஜ சண்டியின் உருவமாகக் கருதலாம்.

அடியார்

உயரம் 156 செ.மீ. அகலம் 30 செ.மீ.

திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்

திருப்பராய்த்துறையிலிருந்து இரண்டு அடியார்களின் சிற்பங்கள் கொண்டுவரப்பட்டு இங்கு வைக்கப்பட்டுள்ளன. ஒன்று வலது கையைத் தொடை மீது கொண்டு இடது கையால்

மலர்பற்றி நின்ற கோலத்தில் காணப்படுகிறது. கரண்ட மகுடம், மகரக் குழை, கண்டிகை, கல்பதித்த மாலை, புரிநூல், வளை ஆகியவை அலங்கரிக்கின்றன. இடையிலிருந்து மேல் தொடை வரை ஆடை கட்டப்பட்டுள்ளது.

அடிமுடிகாணா அண்ணல் (அண்ணாமலையார்)

உயரம் 124 செ.மீ. அகலம் 94 செ.மீ.

திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்

அடிமுடிகாணா அண்ணலாக, ஒளிப்பிழம்பாகக் காட்சி அளிக்கும் இலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்படும் தோற்றம், அடியின் கீழ் அடிதேடி அறிவல் எனச் சென்ற வராகம் மேலே முடிதேடி முன் வருவல் என் முனைந்து செல்லும் அன்னம் ஆகியவற்றுடன் லிங்கோத்பவமூர்த்தியின் உருவம் காட்சி அளிக்கிறது.

சிவனின் தலையை நீண்ட சடை மகுடம் அலங்கரிக்கிறது. மேலிரு கரங்களில் மழுவும், மானும் விளங்க, கீழ் வலக்கை அபயமளிக்க, கீழ் இடக்கை தொடைமீது அமைந்த நிலையில் தோற்றமளிக்கிறது. அடியும், முடியும் மறைத்து நேராக நின்ற நிலையில் இவ்வுருவம் காட்டப்பட்டுள்ளது.

சதுரமான பரந்த முகமும், நெற்றிக் கண்ணுடன் கூடிய நுதலும், எடுப்பான நாசியும், சற்று மெல்லப் பிரிந்த உதடுகளும் கொண்டு விளங்கும் 10-ஆம் நூற்றாண்டின் இவ்வுருவம் சோழர் காலத்துக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இச்சிற்பம் திருவலஞ்சுழி சிவன் கோயில் இரண்டாம் திருச்சுற்று திருமால்பத்தியின் மேல்பகுதியிலிருந்து கொண்டு

வரப்பட்டு வைக்கப்பட்டு உள்ளது. இச்சிற்பம் திருவலஞ்சுழி பழைய சிவாலய கருவறையின் மேற்றிசை மாடத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

சந்திரசேகரர்

செந்தலை

இச்சிற்பம் செவ்வக பீடத்தின் மீது நேராக நின்ற நிலையில் நான்கு கைகளுடன் காணப்படுகின்றது. மேல் வலக்கை கத்தரி முத்திரையில் அமைய, அதன்மேல் அக்கமாலை காட்டப்பட்டுள்ளது. மேல் இடக்கை கத்தரி முத்திரையில் துள்ளும் மானின் பின் கால்களைப் பற்றியுள்ளது. முன் வலக்கை அபய முத்திரையில் அருள்பாலிக்கின்றது. இடக்கை ஊரு முத்திரையில் தொடைமீது அமைந்துள்ளது. தலையை உயர்ந்த சடாமகுடம் அலங்கரிக்கின்றது. வலது காதில் மகரக் குழையும், இடது காதில் வட்டமான ஓலைக் குழையும் அலங்கரிக்கின்றன. கழுத்தில் கற்கள் பதித்த மணிவடமும், சவடியும் உள்ளன. பூநூல், உதரபந்தம், கைவளை, இடைக்கச்சை ஆகிய அணிகளும் ஆடையும் அலங்கரிக்கின்றன. இடுப்பிலிருந்து மேல் தொடை வரை கீழ் ஆடையும், தொடையின் முன்புறம் அரைவட்ட வடிவில் இடைவாரும், இடையின் பக்கங்களில் சரிந்து நிற்கும் ஆடைக்கட்டும் எழிலாக அமைந்துள்ளது. சதைப் பிடிப்புடன் பருத்த முகம், விரிந்த நெற்றி, கோடிட்ட புருவம், மலர்ந்த அரைக்கண்கள், விரிந்த திருவாய், அகன்ற தோள், நீண்ட எடுப்பான உடல்வாகு யாவும் இச்சிற்பத்தில் காணத்தக்கவை. இவ்வுருவம் முற்கால சோழர் கலைப்பாணியில் அமைந்துள்ளது. இதன் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. இவ்வுருவம் வெளிர் மஞ்சள் நிறக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. மூக்கு,

இடது கை, இடது கால் ஆகிய பகுதிகள் சிதைந்துள்ளன. செந்தலையிலிருந்து சேகரிக்கப்பட்ட இச்சிற்பம் பண்டையச் சிவாலயத்திற்கு உரியது.

திருமால்

தஞ்சாவூர்

இச்சிற்பம் உயர்ந்த செவ்வக வடிவ இருக்கை மீது இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு தாமரை இருக்கை மீது, திருவடியை ஊன்றிய நிலையில் நான்கு கைகளுடன் காணப்படுகிறது. மேல் வலக்கை சக்கரத்தையும், இடக்கை சங்கினையும் பற்றியிருக்க வேண்டும். தற்போது கைவிரல்களும் ஆயுதங்களும் சிதைந்தும் மறைந்தும் காணப்படுகின்றன. முன் வலக்கை முழங்கை வரை சிதைந் துள்ளது. அபய முத்திரையில் அருள்பாலிக்கும் கரமாக இருந் திருக்க வேண்டும். முன் இடக்கை இடது தொடைமீது அமைந் துள்ளது.

திருமாலின் தலைமீது கவிழ்ந்த நிலையில் குடையும், பக்கங்களில் இரு வெண்சாமரங்களும் காட்டப்பட்டுள்ளன. திருமாலின் தலையைக் கற்கள் பதித்த உயர்ந்த கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. காதுகளில் மகரக் குழைகள், கழுத்தில் அரை வட்ட வடிவில் அகன்ற மணிவடம், இடது மார்பில் பூநூல், மேல்வயிற்றில் பட்டையான உதரபந்தம், மேற்கைகளில் கேயூரம், முழங்கையில் கடகம், முன் கையில் மணிவளை, இடுப்பிலிருந்து முழங்காலுக்கு கீழ்வரை அலையலையான மடிப்புடைய ஆடை, இடையின் பக்கங்களில் எழிலாகச் சரிந்து நிற்கும் ஆடைக்கட்டு, கால்களில் பாதசரம், இருக்கையின் முன்புறம் விரிந்த தாமரை மலர் யாவும் இச்சிற்பத்தில்

காணத்தக்கவை. இச்சிற்பத்தின் உருவ அமைதி, முகத்தோற்றம், உடல்வாகு, ஆடை அணிகளின் தன்மை யாவும் கொண்டு இதனை கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச்சோழர் சிற்பமாகக் கருதலாம். தஞ்சை நகரிலிருந்து சேகரிக்கப்பட்ட இது இப்பகுதியில் இருந்த பழைய சிவாலயத்தின் மேற்கு தேவகோட்டத்தை அலங்கரித்த சிற்பமாக கருதலாம்.

மூத்த தேவி (சேட்டை)

உயரம் 90 செ.மீ. அகலம் 67.5 செ.மீ.
திருமேற்றளிகை, தஞ்சாவூர் மாவட்டம்

நீண்ட இருக்கையின் மீது இரு கால்களையும் அகட்டி கீழே தளரத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. தவ்வையின் வலது கை மலர்ந்த தாமரை மலரைப் பிடித்துள்ளது. இடது கை மாந்தியின் தொடை மீது அமைந்துள்ளது. கரண்ட மகுடம், உருண்டையான மாலை தலையிலும் நெற்றியின் மேலும், மகரக் குழை செவியிலும், கண்டிகையும் சரப்பளியும் கழுத்திலும், மலர் பதித்த கேயூரம் மேற்கையிலும், கல்லாலும், மணியாலும், பொன்னாலும் அலங்கரிக்கப்பட்ட மூன்று வளைகள் முன் கையிலும், மூன்று பிரிவாகப் பிரிந்து வனப்பூட்டும் சன்னவீரம் மேல் வயிற்றிலும், உடலை ஒட்டி அணி செய்யப்பட்ட ஆடை இடையிலும், பாதசரம் காலிலும் அலங்கரிக்கின்றன. நீண்டு குவிந்த முகமும், எடுப்பான புருவமும், கீழ் நோக்கிப் புன்னகைக்கும் பார்வையும், குவிந்த வனப்பூட்டும் உதடுகளும், அளவான அங்கமும், தட்டையாகப் பருத்த தனமும் சற்று பெருத்த வயிறும் கொண்டு இளமை கோலத்துடன் விளங்குகிறது.

தவ்வையினுடைய வலதுதோளின் மேற்புறத்தில் கழுதை உருவம் சக்கரத்துடன் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறது. தவ்வையின் வாகனமாக கழுதை சக்கரத்துடன் விரைந்து செல்கிறது. நான்கு கால்களின் அசைவுகளிலும் அதன் வேகம் நன்கு வெளிப்படுகிறது. சோழ நாட்டுச் சிற்பங்களில் இங்கு தான் முதன்முதலில் தவ்வையின் வாகனமான கழுதையின் உருவத்தைக் காண்கிறோம்.

தவ்வையின் வலப்புறத்தில் மாட்டுத் தலையும், கையிலே நீண்ட கதையும் கொண்ட குளிகனின் உருவம் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. மாட்டுத் தலையும், மனித உடலும் கொண்டது இவ்வுருவம்.

தவ்வையின் இடப்புறத்தில் மாந்தி எனும் மங்கை அமர்ந்த கோலத்தில் எழிலுருவாய்க் காணப்படுகிறாள். குளிகனும் மாந்தியும் கால்களைக் குத்திட்டு ஒரு காலை மட்டும் தொங்க விட்டு அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ள பாங்கு சிற்பியின் ஆற்றலுக்கு அளவுகோலாக அமைந்துள்ளது. கிடைத்துள்ள கல்லைக் கொண்டு சிற்பி முறையாகச் சிற்பத்தைச் செதுக்கியுள்ள திறன் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வுருவம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலையாகக் கருதப்படுகிறது. இச்சிலை முற்காலச்சோழர் சிற்பத்திற்குரிய சீரிய எடுத்துக் காட்டாக இலங்குகிறது.

சிம்மத்தூண்

உயரம் 165 செ.மீ. அகலம் 60 செ.மீ.

செந்தலை, தஞ்சாவூர் மாவட்டம்

தாமரை இருக்கையின் மீது முன் இரு கால்களைக் கூரிய நகங்களால் பற்றி, பின் இரு கால்களை மடித்து அமர்ந்த

கோலத்தில் சீறும் சிம்மத்தின் உருவம் அமைந்துள்ளது. சிம்மத்தின் தலைமீது தூணின் உடல் பகுதி செங்குத்தாக அமைந்துள்ளது.

சிம்மத்தின் தலைமீதுள்ள தூண்பகுதி, கலசம், அலங்காரமான இடைக்கட்டு, தொங்கும் தாமங்கள் நிறைந்த உடல், அடி ஆகிய பகுதிகளைக் கொண்டு பதினாறு பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

முற்காலச் சோழர் கலை. இச்சிம்மத் தூணில் பல்லவர்களின் கலைப் பாணி ஊடுருவியுள்ளதை நன்கு காணலாம். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

அகத்தியர்

உயரம் 102 செ.மீ. அகலம் 46 செ.மீ.

திருவலஞ்சுழி, தஞ்சாவூர் மாவட்டம்

செவ்வக வடிவான இருக்கையின் மீது இடது காலை மடித்து வலது காலைத் தொங்க விட்டு இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. வலது முன்கை உடைந்துள்ளது. இச்சிற்பத்தின் அமர்ந்த கோலம், முகப்பொலிவு, முடி அமைப்பு, கையில் ஏந்தியுள்ள கெண்டியின் அமைப்பு, ஆடை, அணிகள் யாவும் தஞ்சை மாவட்டம் புஞ்சை நல்துணை ஈசுவரமுடையார் கோயில் அகத்தியரை ஒத்து விளங்குகிறது. இளமஞ்சள் நிறக் கல்லைக் கொண்டு செதுக்கப்பட்டுள்ள இவ்வுருவம் கால வெள்ளத்தில் சிதைந்தும், மழுங்கியும், பொறிந்தும் காணப்படுகிறது. காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு சோழர் கலை.

நான்முகன்

உயரம் 68 செ.மீ. அகலம் 33 செ.மீ.

திருவலஞ்சுழி, தஞ்சாவூர் மாவட்டம்

சதுரமான முகமும், கோடிட்ட புருவமும், தியானத்தில் அமைந்த மூடிய அரைக்கண்களும், எடுப்பான நாசியும், மூடிய உதடுகளும் நான்முகனின் முகப்பொலிவை அழகுற வெளிப்படுத்துகின்றன.

தமிழ்நாட்டில் யோக நிலையில் உள்ள நான்முகனின் சிற்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அழகும், கலையும் நிறைந்த அரிய சிற்பமாக இவ்வுருவம் கருதப்படுகிறது. இவ்வுருவத்தின் கலைச் சிறப்பைக் கொண்டு இச்சிலையின் காலத்தை கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகக் கணிக்கலாம்.

பிள்ளையார் (அமர்ந்த நிலை)

உயரம் 59 செ.மீ. அகலம் 32 செ.மீ.

கோயில் தேவராயன்பேட்டை, பாபநாசம் வட்டம்

இவ்வுருவம் தாமரைப்பீடத்தின்மீது வலது காலைக் குத்திட்டு வைத்து இடது காலை மடித்து நான்கு கைகளுடன் லளிதாசனத்தில் அமர்ந்தகோலத்தில் காணப்படுகிறது. நீள்சதுர வடிவில் கீழ்நோக்கி ஒடுங்கிய யானை முகமும், இடம்புரியாக வளைந்து செல்லும் மெலிந்த துதிக்கையும், இலை வடிவாக அமைந்து மேல் தோள் வரை படிந்துள்ள விரிந்த காதுகளும், எளிய தோள்களும், குறுகிய மார்பும், தசைப்பற்றுள்ள குட்டையான கால்களும், ஆடை, அணியும் இச்சிற்பத்தின் காலத்தைக் கணிக்க உதவி செய்கின்றன. இச்சிற்பம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் காலப் படைப்பாகும்.

இச்சிற்பம் இளஞ்சிவப்பு நிறக் கல்லைக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வண்ணக் கற்களிலுள்ள சிற்பங்கள் மிகக் குறைவாகவே இப்பகுதியில் கிடைக்கின்றன. கோயில் தேவராயன்பேட்டைக் கோபுரத்தின் முன்புறம் கிடந்த இச்சிற்பம் இங்கு எடுத்து வரப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இப்பிள்ளையார் சிற்பம் கோயில் தேவராயன் பேட்டைக் கோயில் பரிவார ஆலயத்திற்குரிய சிற்பமாக இருத்தல் வேண்டும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிள்ளையார் ஒன்று திருப்பாலத் துறையில் இருந்து கொண்டு வரப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பெண்காட்டும் உருவான்

உயரம் 122 செ.மீ. அகலம் 46 செ.மீ.

வீராக்கன், தஞ்சாவூர் மாவட்டம்

வலப்பாகத்தில் சிவனும், இடப்பாகத்தில் உமையுமாய் ஒரே உருவில் அம்மையையும், அப்பனையும் இணைத்திருக்கிறார்கள் சோழர்கால சிற்பிகள். அண்ணலின் இருகைகள் உடைந்துள்ளன. இவற்றில் மேல்வலக்கை மழுவைத் தாங்கிய நிலையில் இருந்திருக்க வேண்டும். அம்மையின் பக்கத்தில் உள்ள இரண்டு கைகளில் மேலிடக்கை மலரைப் பிடித்தும், கீழ் இடக்கை பின்புறமுள்ள நந்தியின் தலைமீதும் அமைந்துள்ளது. இந்த அம்மையும் அப்பனும் இணைந்து நிற்கும் திருக்கோலத்தையே அர்த்தநாரி எனக் கூறுகிறோம். இவ்வுருவம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பிற்காலச் சோழர் கலைக்கு எடுத்துக் காட்டாகும்.

சங்கூதும் பூதகணம்
உயரம் 85 செ.மீ. அகலம் 51 செ.மீ.
சிவபுரம், செங்கை மாவட்டம்

தசைப்பற்றுள்ள குட்டையான அங்கங்களும், தடித்த விரல்களும், பருத்த வயிறும், பெருத்த உடலுங்கொண்டு விளங்கும் இவ்வுருவம் சோழர் காலத்துப் பூதகணங்களுக்குச் சீரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதன் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

நான்முகன்
உயரம் 76 செ.மீ. அகலம் 41 செ.மீ.
சோழபுரம், கும்பகோணம் வட்டம்

இவ்வுருவம் செவ்வக வடிவான இருக்கையின்மீது இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டுத் தாமரை மலர் மீது வைத்த நிலையில், அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. நான்முகனின் நான்கு கைகளில் பின்னிரு கைகள் முறையே அக்கமாலையையும், கெண்டியையும் பற்றிய நிலையிலும், முன்னிரு கைகள் அபயத்திலும், ஏடு ஏந்தும் நிலையிலும் உள்ளன.

சதுரமான முகமும், விரிந்த நுதலும், தூக்கிய புருவமும், கீழ்நோக்கிப் பார்வை செலுத்தும் அமைதியான கண்களும், அகன்ற நாசியும், மடித்த உதடுகளும், மென்மையாக அமைந்து ஆழ்ந்த அமைதியுடன் விளங்குகிறது. இவ்வுருவத்தின் மூன்று முகங்களின் தோற்றம், தலைக்கோலம், அமைதி தவழும் முகப்பொலிவு, அங்கங்களின் தன்மை, ஆடை அணிகள் யாவும் கொண்டு இச்சிற்பம் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டாகக்

கருதப்படுகிறது. சாம்பல் நிறமான கல்லில் இவ்வுருவம் செதுக்கப்பட்டுள்ளது.

இவ்வுருவம் சோழர்காலக் கோயிலின் அர்த்தமண்டபத் தேவ கோட்டத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும். சோழர் கலையை வெளிப்படுத்தும் இச்சிற்பம் வனப்புடன் விளங்குகிறது.

அரவரசன்

உயரம் 86 செ.மீ. அகலம் 46 செ.மீ.

திருமேற்றளிகை - பழையாறை, கும்பகோணம் வட்டம்

ஐந்து தலை அரவம் தலையின் பின்புறம் குடை கவிழ்க்க, கரண்ட மகுடம் அணிந்து, காதுகளில் மகரக் குழைகள் தரித்து, கழுத்தில் சரப்பளி அலங்கரிக்க, இடது தோளிலிருந்து மார்புக்கு குறுக்கே ஓடும் பூணூல் கீழ்வயிற்றை அடைந்து வலது மேற்கையின் உட்புறத்தில் ஏற, நடுவயிற்றில் எளிய உதரக்கச்சை அணிந்து, தோள்களில் கேயூரமும், முன்கையில் வளைகளும் பூண்டு, இடையிலிருந்து மேல்தொடை வரை ஆடை தரித்து கணுக்காலில் கழல் அணிந்து காணப்படுகிறது.

நாகனின் சிற்பம் மெலிந்த உடல் அமைப்பும், அளவான அங்கங்களும், முறையாகப் பெற்று விளங்குகிறது. இவ்வுருவம் இடது காலை மடித்து, வலது காலைப் பக்கவாட்டில் தொங்கவிட்டு, செவ்வக வடிவான இருக்கையின்மீது அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. நாகனின் இரு கைகளில் வலக்கை உடைந்தும், இடக்கை இடது தொடையின்மீதும் அமைந்துள்ளது. வலது கை அபய முத்திரையில் அமைந்திருக்க

வேண்டும் என்பதைச் சிதைந்த கையின் அமைப்பைக் கொண்டு நன்கு அறியலாம்.

இவ்வுருவம் அணிந்துள்ள அணிகலன்கள் குறிப்பிடத் தக்கவை. காதிலுள்ள மகரக்குழை வேலைப்பாடுகளுடன் வலுவாக அமைந்தும், கழுத்திலுள்ள அகன்ற சரப்பளி நுட்பமான வேலைப்பாடுக் கொண்டு, கற்களைப் பதித்ததை ஒத்த நிலையிலும் காணப்படுகிறது. நாகனின் இடது மார்பில் ஓடும் பூணூல் பிரம்ம முடிச்சுகளுடன் காட்டப்பட்டுள்ளது. மேற்கையை அணி செய்யும் கேயூரம் இலைகருக்காணி முகப்புடையது. முன்கைவளை உருண்டையாக அமைந்துள்ளது. இடையில் முன்புறமுள்ள இடைக்கச்சு முடிச்சுகளுடனும், கீழாடை உடலை ஒட்டியும் அமைந்துள்ளன. இவ்வாடை அணிகலன்களின் அமைப்பும், நாகனின் முகப்பொலிவும், அளவான அங்க அமைப்பும் கொண்டு இதனை கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலச் சோழர் கலையாகக் கருதலாம். நாகன் தலையின் பின்புறத்திலுள்ள அரவத்தின் விரிந்த மகுடம் மிகவும் இயற்கையாகச் செதுக்கப்பட்டுள்ளது. திருமேற்றளியில் கண்டெடுக்கப்பட்ட நாகராசரின் சிற்ப வடிவம் திருமணஞ்சேரி கல்யாணசுந்தரர் ஆலயத்திலுள்ள நாகராசரின் சிற்பத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. சோழர் காலத்தைச் சேர்ந்த இச்சிற்பத்தில் பல்லவர் கலைப்பாணி ஊடுருவி இருப்பதைக் கண்டு களிக்கலாம். இச்சிற்பம் அர்த்த மண்டப தேவகோட்டத்தில் வடதிசை மாடத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

கஜலட்சுமி

சோழபுரம்

இவ்வுருவம் செவ்வக வடிவான நீண்ட இருக்கையில் இரு யானைகளின் நடுவே பத்மாசனத்தில் வீற்றிருக்கும் நிலையில் நான்கு கைகளுடன் காணப்படுகிறது. கஜலட்சுமியின் மேற்கைகள் இரண்டும் கடக முத்திரையில் தாமரை மலர்களைப் பிடித்துள்ளன. கீழ் கைகள் இரண்டும் அபய முத்திரையிலும், வரத முத்திரையிலும் அமைந்து அருள்பாலிக்கின்றன. கரண்ட மகுடம், வட்டக்குழைகள், கழுத்தணி, மார்புக் கச்சை, கை வளை, இடைக் கச்சை, ஆகிய அணிகலன்கள் இவ்வுருவை அலங்கரிக்கின்றன. பக்கங்களில் நிற்கும் இரு யானைகள் இரு அமுத கலசங்களைத் தலை கீழாகக் கவிழ்த்து புனித நீரைச் சொரிகின்றன. இச்சிற்பம் இள மஞ்சள் நிறக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இச்சிற்பம் கும்பகோணம் அருகிலுள்ள சோழபுரத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது.

ஆடல் அணங்கு

உயரம் 57 செ.மீ. அகலம் 35 செ.மீ.

திருச்சின்னம்பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சை மாவட்டம் கொள்ளிடத்தின் தென்கரையிலுள்ள கோவிலடிக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. திருச்சின்னம்பூண்டி, திருச்சடைமுடியுடைய மகாதேவர் ஆலயத் திருச்சுற்றைச் சுற்றி சில சிறு சிற்பங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று இவ்வுருவம். இரு இசைக் கலைஞர்களுக்கு நடுவே நாட்டிய மகள் ஒயிலாகத் தோன்றி நடனமிடுகிறாள்.

கைவழி நயனம் செல்லக் கண் வழி மனமும் செல்ல ஆடல் அணங்கு ஆடுவதாகச் சிற்பம் அமைகிறது.

இந்த அழகிய சிற்பப் படைப்பைச் சோழ நாட்டுச் சிற்பியின் கற்பனை ஊற்று, சிற்றுளி ஆற்றலின் அற்புதம் என்றே கூற வேண்டும்.

அழகிய நடனமாதின் இடப்புறம் ஒருவன் மத்தளம் வாசிக்கிறான். இடபுறம் ஒருத்தி கைத்தாளம் ஏந்தி இசைக்கிறாள். இவ்விரு கலைஞர்களின் இசைக்கேற்ப நாட்டிய மங்கை ஆடுகிறாள். அவளது மெல்லிய இடையிலிருந்து வெளிப்படும் கால்கள் எவ்வளவு மென்மையாக வளைந்து வனப்பூட்டுகின்றன. அவள் முகம் மட்டும் அழிந்துள்ளது. ஆடும் மகளின் பெருமிதமான முகத்தோற்றத்தைக் காணமுடியாதவாறு சிற்பத் தடயங்கள் சிதைந்துள்ளன. இருப்பினும் கழுத்திற்கும், காலிற்கும் நடுவேயுள்ள உருவம் மட்டும் எஞ்சியுள்ளது. அவளது இடக்கை குவிந்து முத்திரை காட்டுகிறது. அவளது வலக்கை தாழ்கையாக வனப்புடன் வீழ்ந்துள்ளது. கடக முத்திரை காட்டும் உள்ளங்கையின் அழகும், கைவிரல்களைக் காட்ட நுட்பமாகச் செதுக்கியுள்ள சிற்பியின் திறனும் பாராட்டுதற்குரியது. அவளது மார்பின் இடப்புறம் உள்ள உருண்டு திரண்ட இளந்தனத்தின் அழகு, சிதைந்த வலப்பாகத்திற்கு ஈடு செய்கின்றது.

தலையின் வலப்பாகத்தே சரிந்த கொண்டையும் கழுத்தின் கீழ் ஆரமும், அழகிய கல் பதித்ததையொத்த தொங்கும் பொற்பூமாலையும், தனங்களின் இடையே ஆறாக ஓடும்

மெல்லிய சன்ன வீரமும், கை வளையல்களும், இடையில் தரங்கம் நிறைந்த பட்டாடையும், மெல்லிய ஒட்டியாணமும் அழகு செய்கின்றன.

இப்பெண்ணின் அளவான அங்கங்களும், பருவ எழிலும், முகப்பொலிவும், மெல்லிய இடையும் பெண்மையின் பேரழகைப் பறைசாற்றுவன.

கைத்தாளம் ஏந்தி நிற்கும் இளம் பெண்ணின் முகத்தில் கூட எவ்வளவு எழில் சிந்துகிறது. அவளது கைகளில்கூட எவ்வளவு மென்மை வெளிப்படுகிறது.

மத்தளம் ஏந்தி நிற்கும் கலைஞனின் வலக்கை வெளிப்பட்டுள்ள பாங்கு அவ்விசையின் ஓசையை அல்லவா நம் காதுகளில் ஒலிக்கச் செய்கிறது. இவ்வாறு நுட்பமாகக் கையைக் காட்டியுள்ள சோழர் காலச் சிற்பியின் திறன் அளவிட முடியாத சிகரமாய்ப் பளிச்சிடுகிறது.

காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு, பராந்தகச்சோழன் காலத்துக் கலை.

ஆலமர் செல்வன்

உயரம் 125 செ.மீ. அகலம் 50 செ.மீ.
வெள்ளாம்பெரம்பூர்

சிற்பம் உயர்ந்த செவ்வக பீடத்தின் மீது வீராசனத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. சிவனது வலதுகால் பீடத்தின் கீழ் விழுந்து கிடக்கும் முயலகன் முதுகில் ஊன்றிய நிலையில் அமைய இடது கால் வலது கால் மேல் தொடையில் மடித்த நிலையில் அமைந்துள்ளது. இடது பாதம் முற்றிலும் சிதைந்துள்ளது.

நான்கு கைகளில் மேற்கரங்கள் இரண்டும் காண முடியாதவாறு சிதைந்துள்ளன. கீழ்வலக்கரம் சின் முத்திரையில் ஞானகரமாக அமைந்துள்ளது. இடக்கரம் புத்தக முத்திரையில் ஏடு ஏந்தியுள்ளது. தலையை அழகிய சடா பாரம் அலங்கரிக்கிறது. சடா பாரத்தின் முன்புறம் மகரத்தலையில் கபாலம் காட்டப்பட்டுள்ளது. வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும் அழகு செய்கின்றன. தோள்களில் வாகு மாலையும், புஜங்களில் இலைக்கருக்கு முகப்புடைய தோள்வளையும் முன்கையில் கைவளையும், கழுத்தில் மணிவடம், மலர் முகப்புடைய பொன்வடம் உருத்திராட்ச மாலையும் அலங்கரிக்க இடது மார்பில் பூநூலும் மேல் வயிற்றில் உதரகச்சையும் இடுப்பில் மேல் தொடை வரை இடைக்கச்சையும் வலது முழங்காலுக்கு கீழ் கிண்கிணியும் பாதங்களில் பாதசரமும் அலங்கரிக்கின்றன.

பரந்து விரிந்த முகம், கோடிட்ட புருவம், தியானப் பார்வை யுடன் கீழ் நோக்கிய கண்கள், எடுப்பான மூக்கு, குவிந்த திருவாய், ஞான முத்திரை காட்டும் வலக்கரம் யாவும் இச்சிற்பத்தில் காணத்தக்கவை. முகத்தில் இளம் புன்னகையுடன் கவிழ்ந்து கிடக்கும் முயலகன் இடக்கரம் நாகத்தை பற்றிப் பிடிக்க வலக்கரம் நாக முத்திரை காட்டும் நிலையில் அமைந்துள்ளது.

கரிய நிறக்கல்லில் முன் அழகும், பின் அழகும் வெளிப்படும் நிலையில் போதிய இடைவெளிவிட்டு செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் ஞானதட்சிணாமூர்த்தி வடிவமாக இருத்தல் வேண்டும்.

விஜய நகர கால கலைப்பாணியில் அமைந்துள்ளது. காலம் கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு.

வெள்ளாம் பெரம்பூரில் சேகரிக்கப்பட்ட இவ்வுருவம் அப்பகுதியைச் சார்ந்த சிவாலயத்திற்கு உரியது.

நடராசர் சிவகாமி

உயரம் 39 செ.மீ. அகலம் 15 செ.மீ.

இச்சிற்பம் தஞ்சை மாவட்டம், திருப்பாலத்துறை சிவன்கோயில், கூறையில் கபோதக கூட்டில் இடம் பெற்ற சிற்பமாகும். நடராசர் வடிவம் வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி ஆடும் நிலையில் நான்கு கைகளுடன் காணப் படுகிறது. மேற்கைகள் இரண்டும், உடுக்கையும், அனலும் பற்றியுள்ளன. உடுக்கை பிடிக்கும் கை டமரு முத்திரையில் அமைய, அனல் ஏந்தும் கை அர்த்தசந்திர முத்திரையில் அமைந்துள்ளது. கீழ்வலக்கரம் அபய முத்திரையிலும் கீழ் இடக்கரம் மார்புக்கு குறுக்கே நீண்டு வேழ முத்திரையிலும் அமைந்துள்ளது. தலையில் இருபுறமும், விரிசடைகள் காட்டப்பட்டுள்ளன. ஆனந்த தாண்டவம் ஆடும் நடராசனின் இடப்புறம், அன்னை சிவகாமியின் உருவை காண்கிறோம். இவ்வுருவம் இரண்டு கைகளுடன் ஒயிலாக நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. வலக்கரம் கடக முத்திரையில் மலர் பற்றும் கரமாக அமைந்துள்ளது. இடக்கரம் தாழ்கரமாக அமைந்துள்ளது. கரண்ட மகுடம் மணிவடம், பூநூல், கேயூரம், கைவளை இடைக்கச்சை, யாவும் இச்சிற்பத்தை அலங்கரிக்கின்றன. இவ்வுருவம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

ரிஷபவாகனமூர்த்தி

திருலோக்கி

ஆகமங்கள் சிவனது சிற்ப வடிவங்களை 25 வகையாக கூறும் அவற்றில் ஒன்று ரிஷபவாகனமூர்த்தி ஆகும்.

இவ்வுருவம் சிவனது வாகனமாக ரிஷபம் என்னும் காளையின் முன்புறம் இரண்டு கைகளுடன் மானிட வடிவில் நின்ற கோலத்தில் காணப்படும். சிவனது இடக்கரம் காளையின் முதுகு அல்லது திமில் மீது அமைந்தவண்ணம் காணப்படும். மற்றொரு கரம் நீள்கரமாக அமைந்து காணப்படும். இத்தகைய சிற்ப வடிவங்கள் அமைக்கும்போது சிவனைக் காளையோடும் சில நேரங்களில் காளை மாடு இன்றியும், சிவனது கை மட்டும் காளை மீது ஊன்றிய பாவனையில் காணப்படுவதும் உண்டு. இத்தகைய வடிவங்களை ரிஷப வாகனர், ரிஷப வாகன தேவர், காளை வாகனத் தேவர், ஏறு ஊரும் பெருமான் என்று அழைப்பர்.

திருப்பனந்தாள் அருகில் உள்ள திருலோக்கி என்ற ஊரில் இருந்து சேகரிக்கப்பட்ட இச்சிற்ப வடிவம் இவ்வகையைச் சார்ந்தது. அளவோடும் அழகோடும் அமைக்கப்பட்டுள்ள சிவனது இவ்வுருவம் இடுப்புவரை மட்டும், நமக்கு கிடைத்துள்ளது. மானிட வடிவில் இரண்டு கைகளுடன் மட்டும், இவ்வுருவம் காணப்படுகிறது. வலது கரம் தாழ்கரமாக நீண்டும், இடது கரம் காளை மீது ஊன்றும் பாவனையிலும் காணப்படுகிறது.

முழங்கைக்கு முன் உள்ள முன் கரங்கள் சிதைந்துவிட்டன. புஜங்களில் இரட்டை வட தோள்வளையம் அலங்கரிக்கிறது. இதன் கழுத்தில் கற்கள் பதித்த அணியும் பெருமணிகள் கோத்த மணிவடமும், முத்துக்கள், கோத்த முத்துமாலையும் அலங்கரிக்கின்றன. இடது தோளில் இருந்து மார்பில் பூநூல் வழிந்தோடுகிறது. மேல்வயிற்றில் வயிற்று கச்சை

கட்டப்பட்டுள்ளது. சிவனது தலையை எழில் வாய்ந்த ஜடாபாரம் என்னும் தலைக்கோலம் அலங்கரிக்கிறது. சுருண்ட கேசங்கள் எங்கும் பரந்து, விரிந்து வலப்புறம் வனப்போடு சரிந்து காட்சியளிக்கிறது. சிவனது நீள் செவிகளில், இடப்புறம் வட்டமான ஓலை குண்டலம் செங்குத்தாக அமைந்து வனப்பூட்டுகிறது. வலது செவிகள் அணிகள் இன்றி நீள் செவியாக காட்டப்பட்டுள்ளது. உருளை வடிவான முகம், விரிந்த நெற்றி வில்போல் வளைந்த புருவம், நீண்டு மலர்ந்த அரைக்கண்கள், நெடிய நாசி, குவிந்த இதழ்கள், குவிந்த திருவாய், அளவான கழுத்து, அழகிய உடல், பெருமிதமாக தோற்றம் இச்சிற்பத்தில் காணத்தக்கவை. முந்தைய சோழர்களது சிற்பக் கலைக்குச் சான்றாக அமையும் இவ்வடிவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

சண்டிகேசுவரர்

உயரம் 72 செ.மீ. அகலம் 38 செ.மீ.

திருபாலத்துறை

இவ்வுருவம் செவ்வக பீடத்தின் மீது இடதுகாலை மடித்து வலது காலைப் பீடத்திற்கு முன்புறம் தொங்கவிட்டு இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. வலது கை மழுவாயுதத்தைக் கடக முத்திரையில் பற்றியுள்ளது. இடதுகை தொடை மீது அமைந்துள்ளது. தலையில் விரிந்த சடாபாரம் அலங்கரிக்கிறது. காதுகளில் ஓலைக்குழைகள் செங்குத்தாக செருகப்பட்டுள்ளது. கழுத்தில் மலர்முகப்படைய மணிவடம் அணி செய்கிறது. இடது தோளிலிருந்து பூநூல் கீழ்வயிற்றை அடைந்து பின் முதுகில் ஏறிச் செல்கிறது. மேல்வயிற்றில் உதரபந்தம் கட்டப்பட்டுள்ளது. மேற்கைகளில் மலர்

முகப்புடைய வாகுமாலையும், முன்கைகளில் மூன்று வளைகளும், இடுப்பில் மலர் முகப்புடைய கச்சையும் அலங்கரிக்கிறது. கச்சை கீழ் தொடை வரை அமைந்து காணப்படுகிறது. கால்களில் தண்டை அலங்கரிக்கிறது. ஆடை அணிகள், ஆயுதம், முகத்தோற்றம் யாவும் கொண்டு, இதனை கி.பி. 9-10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பமாகக் கருதலாம். திருபாலத்துறையில் இருந்து சேகரிக்கப்பட்ட இவ்வுருவம் முந்தைய சோழர் காலத்தியது.

மூத்ததேவி (சேட்டை)
உயரம் 92 செ.மீ. அகலம் 53 செ.மீ.
கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

இது செவ்வக வடிவமான இருக்கையின் மேல் இருகால் களையும் அகல விரித்து முன்புறம் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் இருகைகளுடன் காணப்படுகிறது. வலக்கை கடக முத்திரையில் நீலோத்பலம் (அல்லிமலர்) என்னும் மலரை பிடித்துள்ளது. இடக்கரம் நீண்டு தொடைக்கருகில் பீடத்தின் மேல் உள்ள குவிந்த திண்டுகள்மீது அமைந்துள்ளது. தலையில் அழகிய கரண்ட மகுடம் தலைக்கோலமாக அமைந்துள்ளது. மகுடத்தின் பக்கங்களில் சுருண்ட கேசங்கள், வனப்போடு அமைந்து எழில் கூட்டுகிறது. மேல்நெற்றியை சுற்றிலும் கண்ணிமாலை அலங்கரிக்கிறது. காதுகளில் மகர குண்டலங்கள் அழகு செய்கின்றன. கழுத்தில் மணிவடமும், மார்பில் சன்ன வீரமும் அமைந்து அழகு செய்கிறது. மேல்புஜங்களில் பூரிம முகப்புடைய தோள்வளை முன்கைகளில் மூன்று வளைகளும் அணி செய்கின்றன. அகன்று பெருத்த வயிற்றில் உந்திக்கு கீழ் இடுப்பைச் சுற்றிலும் தளர்ந்த ஆடை உடலை ஒட்டிய வண்ணம் முழங்காலுக்குக் கீழ்வரை அலங்கரிக்கிறது. கீழ் ஆடையின்

ஆடைக்கட்டு மேல் நோக்கி கீழ்பாச்சி போன்று எழிலாக செருகப்பட்டுள்ளது.

கால்களில் தண்டை அலங்கரிக்கிறது. பரந்து விரிந்த முகம், உயர்ந்த புருவம், திறந்த கண்கள், நீண்ட நாசி, தடித்த உதடுகள், மார்புக் கச்சையின்றி திறந்த தனங்கள், பெருத்து சரிந்த கீழ் வயிறு, தளர்ந்த கீழ் உடல், இருக்கையின் முன்புறம் ஊன்றிய கால்கள் யாவும் சிற்பத்தில் காணத்தக்கவை. சேட்டையின் இடதுதோளின் பின்புறம் காக்கைக் கொடி காட்டப்பட்டுள்ளது. கொடியின் மேல் மட்டத்தில் காக்கை பக்கவாட்டில் திரும்பிய நிலையில் இயற்கையாக செதுக்கப்பட்டுள்ளது. கொடியில் கட்டப்பட்டுள்ள குஞ்சம் கீழ்நோக்கி எழிலாகச் சரிந்து நிற்கிறது. கும்பகோணத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சேட்டையின் சிற்ப வடிவம் அப்பகுதியில் உள்ள சிவாலயம் ஒன்றில் பரிவார தெய்வமாக இருத்தல் வேண்டும். அல்லி மலரை வலக்கையில் பற்றியுள்ள சேட்டையின் சிற்ப வடிவம் அரியது. முந்திய சோழர் காலத்திய அழகும், வனப்பும் மிக்க இச்சிற்ப வடிவம் கி.பி. 875ஐ சார்ந்ததாகக் கருதலாம். இதனை முதலாம் ஆதித்தச் சோழன் காலத்தின் முற்பகுதியைச் சார்ந்த சிற்பமாகக் கருதலாம். சாம்பல் நிற கற்பலகையின் முன்புறம் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. 84 செ.மீ. உயரமும், 54 செ.மீ. அகலமும், 26 செ.மீ. தோள் அகலமும் உடையது.

வீணாதர தட்சிணாமூர்த்தி

உயரம் 134 செ.மீ. அகலம் 36 செ.மீ.
திருவலஞ்சுழி, தஞ்சாவூர் மாவட்டம்

சிவனது 25 சிவ வடிவங்களில் ஒன்று தட்சிணாமூர்த்தி, இது ஞான தட்சிணாமூர்த்தி, வியாக்கியான தட்சிணாமூர்த்தி,

யோக தட்சிணாமூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி என நான்கு வகைப்படும்.

இதில் இசையை உபதேசிக்கும் நிலை வீணாதர தட்சிணாமூர்த்தி வடிவம் எனப் பெயர் பெறும். தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழியில் சேகரிக்கப்பட்ட வீணாதரர் உருவம் இள மஞ்சள் நிறக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. சிவகணத்தின் தலை மீது வலது திருவடியை தூக்கி ஊன்றி, இடது திருவடியைத் தாமரை இருக்கை மீது இடது காலை நிறுத்தி இரண்டு கைகளில் நீண்ட வீணையைப் பற்றி மீட்டும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. வீணையின் நீண்ட தண்டும் வீணையைப் பற்றி மீட்டும் கைவிரல்களும் காண முடியாதவாறு சிதைந்துள்ளது.

வீணாதரமூர்த்தியின் தலையைப் பரந்து, விரிந்த சடாபாரம் அலங்கரிக்கிறது. சடாபாரத்தின் இடப்புறம் இளம்பிறை காட்டப்பட்டுள்ளது. சிவனது மேல் நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப்பட்டம் அழகு செய்கிறது. இடது செவியில் ஓலைக்குழை அலங்கரிக்க, வலது நீள் செவி அணியின்றி எளிமையாகக் காட்டப்பட்டுள்ளது.

கழுத்தில் கண்டசரமும், மணிவடமும், முத்துமாலையும் அலங்கரிக்க இடது தோளிலிருந்து கீழ் வயிறு நோக்கி வரும் பூநூல் பின் முதுகில் ஏறிச் செல்கிறது. மேல்வயிற்றைச் சுற்றிலும் எளிய உதரக்கச்சை அலங்கரிக்க இடுப்பிலிருந்து தொடை வரை இடைக்கச்சையும் இடையில் பக்கங்களில் பாதம் வரை சரிந்து நிற்கும் அழகிய ஆடைக்கட்டும், தொடை மீது வளைந்து வனப்பூட்டும் இடைவாரும் இச்சிற்பத்தில் காணத்தக்கவை.

மேற்புஜத்தில் இலைகருக்கு முகப்புடைய தோள்வளையும், முன்கையில் கை வளையும், பாதங்களில் பாதசரமும் இவ் வடிவத்திற்கு அழகு சேர்க்கின்றன. நீண்டு மெலிந்த உடல்வாகும், எடுப்பான தோற்றமும், இதழ்களில் இள நகை புரிய கழுத்தை மிடுக்காகத் திருப்பி எழிலாக நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. சிவனது வலது திருவடியைத் தலையில் தாங்கி நிற்கும் சிவனது சிவகணம், ஆடும் பாம்பை கையில் பிடித்துள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முற்பகுதியைச் சார்ந்த இவ்வடிவம் பராந்தக சோழர் காலத்தியது. பராந்தகன் காலத்துச் சிற்பக் கலைக்குச் சான்றாகத் தெரிகிறது. செவ்வக வடிவ நீண்ட பலகைக் கல்லின் முன்புறம் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

சுகாசனமூர்த்தி

உயரம் 100 செ.மீ. அகலம் 41 செ.மீ.

கரந்தை, தஞ்சாவூர் மாவட்டம்

இவ்வுருவம் செவ்வக வடிவான இருக்கையின் மீது இடது காலை மடித்து, வலது காலைப் பீடத்தின் முன்புறம் தொங்கவிட்ட நிலையில் நான்கு கைகளுடன் சுகாசனத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. நான்கு கைகளில் மேல் வலக்கை நீண்ட மழுவாயுதத்தைக் கத்தரி முத்திரையில் பற்றியுள்ளது. இடக்கையில் துள்ளும் மான் ஒன்று காட்டப்பட்டுள்ளது.

மானின் உருவம் மிகவும் மென்மையாகச் செதுக்கப்பட்டு உள்ளது. கீழ் வலக்கை கட்டை விரலைத் தவிர ஏனைய விரல்கள் மடித்த நிலையில் ஆகூய வரத முத்திரையில் அமைந்துள்ளது.

இடக்கை தொடைமீது அமைந்துள்ளது. சிவனது தலையை உயர்ந்த சடாமகுடம் அலங்கரிக்கிறது. நீள் செவிகளில் மகர குண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் பிறைவடிவான பட்டையான அணிகலன் அமைந்துள்ளது.

இடது தோளில் இருந்து மார்பு வழியாக கீழ்வயிற்றை நோக்கி தடித்த பூநூல் ஓடுகிறது. மேல் வயிற்றில் பட்டையான உதரபந்தம் காட்டப்பட்டுள்ளது. இடையில் ரிப்பன் முடிச்சு முகப்போடு, இடைக்கச்சை மேல் தொடை வரை அமைந்து அலங்கரிக்கிறது. மேல்புஜங்களில் பட்டையான தோள்வளையம் முன்கைகளில் பட்டையான கைவளை காணப்படுகிறது. சதுரமாக பரந்த முகம், தூக்கிய புருவம் மலர்ந்த கண்கள், இளமுருவல் தோன்றும் இதழ்கள், அகன்ற தோள்கள், விரிந்த மார்பு, தடித்த கைவிரல்கள், பளுவான ஆடை, தட்டையான அணிகலன்கள், மழுவாயுதத்தின் அமைப்பு, சிற்பத்தின் அமர்ந்த கோலம், முகப்பொலிவு யாவும் கொண்டு இதனை கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகக் கருதலாம். முந்தைய சோழர்காலச் சிற்பத்தில் பல்லவர் காலக் கலையின் தாக்கம் ஊடுருவி இருப்பதை காணலாம். தஞ்சை அருகே உள்ள கரந்தையில் இருந்து இச்சிற்பம் சேகரிக்கப்பட்டுள்ளது. இது அப்பகுதியைச் சார்ந்த சிவாலயத்திற்கு உரியது.

தென்முகக் கடவுள்

உயரம் 84 செ.மீ. அகலம் 37 செ.மீ.

சோழபுரம், தஞ்சாவூர் மாவட்டம்

இவ்வுருவம் குடந்தை அருகில் உள்ள சோழபுரம் சிவாலயத்திற்குரியது. இங்குள்ள சிதைந்த சிவாலயம்

ஒன்றிலிருந்து இவ்வுருவம் சேகரிக்கப்பட்டுள்ளது. வலது திருவடியின் கீழ் வழக்கமாகக் காணப்படும் முயலகன் என்னும் சிவகணம் காட்டப்படாதது இச்சிற்பத்தின் சிறப்புகளில் ஒன்று.

இவ்வுருவம் வலது காலைத் தரையில் ஊன்றி, இடதுகாலை மடித்து, வலது முழங்கால் மீது வைத்து வீராசனத்தில் வீற்றிருக்கிறது. நான்கு கைகளில், மேல்வலக்கை அக்க மாலையைப் பற்றியுள்ளது. மேல் இடக்கை அக்கினி சட்டியைப் பற்றியுள்ளது. கீழ் வலக்கை புஜம் வரை சிதைந்துள்ளது. இக்கை சின் முத்திரையைக் காட்டும் நிலையில் இருந்திருக்க வேண்டும். கீழ் இடக்கை புத்தக முத்திரையில் சுவடியை ஏந்தியுள்ளது. சிவனது தலையை சுருண்ட கேசங்களைக் கொண்டு விரிந்த சடாபாரம் அலங்கரிக்கிறது. இதன் இருபுறமும் ஆடும் நாகமும், பிறைச்சந்திரனும் காட்டப்பட்டுள்ளது. வலது காதில் மகர குண்டலமும் இடது காதில் பத்ரகுண்டலமும், மேல் நெற்றியில் இரத்தினப்பட்டமும் அணி செய்கிறது. கழுத்தில் மணிவடமும், அரும்புச்சரமும், முத்துவடமும் அழகு செய்கின்றன. மேல் வயிற்றில் மெல்லிய உதர பந்தமும், இடையில் தொடை வரை ஆடையும் இவ்வுருவை அலங்கரிக்கின்றன. சதுரமான பரந்த முகம், தூக்கிய புருவம், தியானத்தில் கீழ்நோக்கும் இமை, மூடிய கண்கள், விரிந்த திருவாய், எடுப்பான மேல் உடல், அளவான அங்கங்கள் யாவும் சிற்பத்தில் காணத்தக்கவை.

இள மஞ்சள் நிற கல்லைக் கொண்டு இவ்வுருவம் செதுக்கப்பட்டுள்ளது. வாய், வலது முன்கை, இடது பாதம் யாவும் முற்றிலும் சிதைந்துள்ளது. இவ்வுருவம் இருக்கை காட்டப்படாது அமர்ந்துள்ள கோலத்தில் இவ்வுருவத்தை வடித்துள்ள சிற்பியின் திறன் போற்றத்தக்கது. இவ்வுருவம்

முந்தைய சோழர் காலத்தியது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது.

சண்டீச்சுரர்

உயரம் 70 செ.மீ. அகலம் 33.5 செ.மீ
திருவாலம்பொழில், தஞ்சாவூர் மாவட்டம்

தமிழ்நாட்டுச் சைவக் கோயில்களில் திருச்சுற்று வடகிழக்குப் பகுதியில் சண்டீச்சுரருக்கு எடுக்கப்பட்ட பரிவார ஆலயத்தைக் காணலாம். இவ்வாலய வாயில் தென்திசை நோக்கி அமைந்திருக்கும். வலது கையில் மழுவைப்பற்றி இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் சண்டியின் உருவம் அமைந்திருக்கும். சிற்பங்களிலும், படிமங்களிலும் இவ்வுருவத்தை வடித்துள்ளனர். ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் உலாவாக எடுத்துச் செல்லும் உற்சவத் திருமேனிகளில் சண்டியின் உருவம் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இவை நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் அமர்ந்த கோலத்திலும் காணப்படுகின்றது. சோழர்காலப் பரிவார ஆலயங்களில் இடம்பெற்ற சண்டீச்சுரரின் உருவத்தை இங்கு காணலாம்.

சதுரமான பரந்த முகமும், விரிந்த நுதலும், கோடிட்ட புருவமும், அமைதியாகப் பார்வையைச் செலுத்தும் அரைக் கண்களும், அகன்ற நாசியும், முறுவலிக்கும் தடித்த உதடுகளும், விரிந்த மார்பும், அளவான அங்கங்களும் பெற்று இவ்வுருவம் விளங்குகிறது. சண்டீச்சுரரின் வலது கை மழுவைப் பிடித்தும் இடது கை தொடை மீது அமைந்தும் காணப்படுகிறது. காலம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு. சோழர் கலை.

பைரவர்

உயரம் 108 செ.மீ. அகலம் 45 செ.மீ.

கோயில்தேவராயன்பேட்டை

சதுரமான பீடத்தின் மீது இவ்வுருவம் இரண்டு கால்களை ஊன்றி நான்கு கைகளுடன் நேராக நின்ற திருக்கோலம் மேல் வலக்கை உடுக்கையை செங்குத்தாக பிடித்துள்ளது. மேல் இடக்கை நாகப்பாசம் சுற்றிய உடுக்கையை செங்குத்தாக பிடித்துள்ளது. கபால கிண்ணத்தை பக்கவாட்டில் ஏந்தி உள்ளது. கீழ் இடக்கை தொடை மீது ஊரு முத்திரையில் அமைந்துள்ளது. கரத்தை சுற்றிலும் ஆடும் நாகம் ஒன்று சுற்றி நிற்கிறது. கீழ் வலக்கரம். திரிசூலம் அல்லது கத்தியை ஏந்தி இருக்க வேண்டும் கரத்தின் முன் பகுதி சிதைந்துள்ளது. கரத்தின் பக்கவாட்டில் ஆடும் நாகம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. மேல் நெற்றியைச் சுற்றிலும் அரவம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

தலையில் விரிந்த ஜடாபாரம் அலங்கரிக்கிறது. தலையின் உச்சியில் மண்டை ஓடும் இடப்புறம் சந்திரனும் காட்டப்பட்டுள்ளது. வலது காது அணியின்றி நீள் செவியாக உள்ளது. இடது காதில் வட்டக்குழை அலங்கரிக்கிறது. கழுத்தில் கண்டசரமும் கற்கள் பதித்த அணியும் இடது மார்பில் கபால மாலையும், இடையைச் சுற்றிலும் நாக அரைஞாணும் காலில் கழலும் பாதசாரமும் அலங்கரிக்கிறது. வலது காலில் காப்பும் மேற்கைகளில் அனந்தவளையும் அலங்கரிக்கிறது. நீள் சதுர முகம் வளைந்த புருவம் பருத்த விழிகள், புடைத்த நாசி, திறந்த வாய், நீண்ட உடல் வாகு, யாவும் சிற்பத்தில் காணத்தக்கது. கரிய நிறக்கல்லில் இவ்வுருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் தலை, முன் கைகள், மேற்கைகள், இடுப்பு ஆகிய அங்கங்களில் ஐந்து நாகங்கள் அலங்கரிக்கின்றன.

இதன் உருவ அமைதி, தலைக்கோலம், முகப்பொலிவு, அணிகள் யாவும் கொண்டு இது 10-ஆம் நூற்றாண்டு முற்பகுதியைச் சேர்ந்த சிற்பமாகக் கருதலாம். பாசக்கயிற்றைப் பற்றும் மேல் இடக்கரம் இங்கு கபாலக் கிண்ணத்தை ஏந்தி யுள்ளதும், இடக்கரம் தொடைமீது அமர்ந்துள்ளதும் சிறப்பு அம்சமாகக் கருதலாம். இது தேவராயன்பேட்டையில் இருந்த சிவாலயத்தின் பரிவாரத் தெய்வமாக இருத்தல் வேண்டும்.

மகாவீரர்

உயரம் 62 செ.மீ. அகலம் 41 செ.மீ.

கரந்தை, தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் கரந்தைப் பகுதியில் சேகரிக்கப்பட்ட இவ்வுருவம் முற்காலச்சோழர் காலத்தியது. அர்த்தபரியங்காசனத்தில் வீற்றிருக்கும் இவ்வுருவம் இரண்டு கைகளுடன் காணப்படுகிறது. இரண்டு கைகளும் பாதத்தின் மீது ஒன்றின் மீது ஒன்றாக தியான கோலத்தில் இருந்திருக்க வேண்டும். தற்போது முன்கை விரல்களும், கால்களின் பாதங்களும் சிதைந்துள்ளன. மகாவீரரின் மழுங்கிய தலைமீது சுருண்ட கேசங்கள் படர்ந்துள்ளன. சதுரமான முகம், கோடிட்ட புருவம், இமை மூடிய நீண்ட அரைக்கண்கள், அணிகளற்ற எழில் நீள் செவிகள் அகன்ற தோள், விரிந்த மார்பு யாவும் இச்சிலையில் காணத்தக்கவை. மகாவீரரின் உருவம் சிம்மாசனத்தின் மீது உள்ள திண்டின் மீது சாய்ந்த நிலையில் காணப்படுகிறது. தலையின் பின்புறம் சுடருடன் கூடிய திருவாசி அரைவட்ட வடிவில் காட்டப்பட்டுள்ளது. அதன்மேல் கவிழ்ந்த நிலையில் முக்குடைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்து

அலங்கரிக்கின்றன. திருவாசியின் இருபுறமும் இரு இயக்கர்கள் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் தலையைச் சாய்த்த வண்ணம் காட்டப்பட்டுள்ளனர். இவர்களது வலக்கரம் நீலோத்பலம் மலரைக் கடக முத்திரையில் பற்றியுள்ளன. இயக்கர்களின் இடக்கரங்கள் இடுப்பின்மீது கடிமுத்திரையில் அமைந்துள்ளது. கரண்ட மகுடம் வட்டக் குழைகள், மணிவடம், முத்துவடம், சன்னவீரம் தோள்வளை, இடைக்கச்சை யாவும் அணிந்துள்ளனர். பக்கவாட்டில் கழுத்து சாய்ந்தவண்ணம் முகத்தில் இளம் புன்னகை தவழ அளவான உடல்வாகோடு காட்டப்பட்டுள்ளார். மகாவீரரின் குடைமீது கொடிகருக்குகள் தோரணங்கள் அமைந்து பொலிவூட்டுகிறது. இதன் உருவமைப்பு, முகப்பொலிவு, தியானத்தில் வீற்றிருக்கும் கோலம், அளவான அங்கங்கள் யாவும் முற்காலச்சோழர் கலையை வெளிப்படுத்துகிறது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் சிற்ப வடிவமாக இதனைக் கருதலாம். எனவே கரந்தையில் சேகரிக்கப்பட்ட இச்சிற்பம் ஆதித்த சோழன் காலத்தில் அப்பகுதியில் மகாவீரர் கோயில் ஒன்று இருந்ததை அறிய முடிகிறது.

இச்சிற்பத்தில் இடது தோள்பட்டை, முன்கைகள், கால் பாகம், வலது முகவாய் யாவும் சிதைந்தும் தேய்ந்தும் உள்ளது.

திருமால்

உயரம் 88 செ.மீ. அகலம் 38 செ.மீ.

சிதம்பரம், கடலூர் மாவட்டம்

வட்டமான இருக்கை மீது மேலாக நின்ற கோலத்தில் இரண்டு கைகளுடன் இவ்வுருவம் காணப்படுகிறது. நான்கு

கைகளில் மேல் வலக்கை கத்திரி முத்திரையில் சக்கராயுதத்தைப் பற்றியுள்ளது. மேல் இடக்கை கத்தரி முத்திரையில் சங்கினைச் செங்குத்தாகப் பற்றியுள்ளது. கிரீட மகுடம், இரத்தின பட்டம், மகர குண்டலம், கண்டசரம், மணிவடம், பூநூல், உதர பந்தம், தோள்வளை, காப்பு, கைவளை இடைக்கச்சை பாதசரம் ஆகிய அணிகளும் ஆடையும் முடி முதல் பாதம் வரை இவ்வுருவை அலங்கரிக்கின்றன.

இடையில் உள்ள கச்சை இடுப்பிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை அமைய ஆடையின் பக்கங்களில் கச்சையின் ஆடைக்கட்டு சரிந்து நிற்கிறது. சிற்பத்தின் உருவ அமைப்பு முகப்பொலிவு, ஆடை அணிகள் யாவும் கொண்டு இதனை கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பமாகக் கருதலாம். பிந்தைய சோழர்காலக் கலை இவ்வுருவம் வெள்ளை-சாம்பல் நிறத்தில் ரேகை படிந்த கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அதனால் சிற்பத்தின் வனப்பை முழுதும் காணுமாறு இல்லை.

வீணாதர தட்சிணாமூர்த்தி

உயரம் 99 செ.மீ. அகலம் 41 செ.மீ.

திருவேதிக்குடி, தஞ்சாவூர் மாவட்டம்

வட்டமான இருக்கை மீது இடது காலை ஊன்றி வலது காலைச் சற்று முன்வைத்து இடுப்பை இடப்புறம் ஒடித்து இருகைகளில் வீணை ஏந்தி தலையை முன்புறம் சாய்த்த வண்ணம் நின்ற திருக்கோலம். இடது மார்புக்குக் குறுக்கே மார்பை ஒட்டி வீணையை இருகைகளால் பற்றி, விரல்களால் மீட்டும் நிலையில் வீணாதரமூர்த்தியின் உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வீணையில் முகமும் உடலும்

மட்டுமின்றி, வீணைமீட்டும் கரங்களும் விரல்களும் கூட காணமுடியாதவாறு சிதைந்துள்ளது. ஆனால் வீணையின் நாதத்தில் தம்மை மறந்த நிலையில் லயித்து நிற்கும் வீணாதரரின் முகப்பொலிவு எழில் மிக்கது. இசையை உபதேசிக்கும் அண்ணலின் அழகிய முகம், செங்குத்தான நெற்றிக்கண், கோடிட்டபுருவம் நீண்ட அரைக்கண்கள், எடுப்பான மூக்கு, அழகிய அதரங்கள், நீள்செவி, சுருண்டு விரிந்த கேசங்கள், விரிந்த சடபாரம் யாவும் இச்சிற்பத்தில் கூர்ந்து காணத்தக்கவை. வீணாதரமூர்த்தியின் பின் கரங்களின் வலக்கரம் அடையாளம் காண முடியாதவாறு முற்றிலும் சிதைந்து விட்டது. மேல் இடக்கரம் கடக முத்திரையில் அக்கமாலை பற்றியுள்ளது. இச் சிற்பத்தின் சிதைந்த கரங்களை ஈடு செய்யும் வகையில் இக்கரம் அமைந்துள்ளது. இடது காதில் மட்டும் சுருள்தோடு அழகு செய்ய வலது காது அணிகள் இன்றி எளிமையாகக் காட்டப்பட்டுள்ளது. கழுத்தில் மேல் தோள்களில் மேல் மாலை, கழுத்தில் கண்டசரம், மலர் முகப்புடைய மணிவடம், இடது தோளிலிருந்து மார்பு வழியாக பின் முதுகில் ஏறிச்செல்லும் பூநூல் வயிற்றை அலங்கரிக்கும் உதரக்கச்சை, மேற்கையில் வனப்பூட்டும் தோள்வளை முழங்கையைச் சுற்றியுள்ள கடகவளை முன் கையை அலங்கரிக்கும் கைவளை இடுப்பைச் சுற்றியுள்ள கீர்த்திமுகக் கச்சை, தொடை மீது வனப்பூட்டும் குறங்குசெறி இடைவார், இடையின் பக்கங்களில் முழங்காலுக்குக் கீழ்வரை சரிந்து நிற்கும் ஆடைக்கட்டு யாவும் காணத்தக்கவை. இளமஞ்சள் நிறக்கல்லில் உயிர்த்துடிப்புடன் நேர்த்தியாக இவ்வுருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்ப வடிவம் முந்தைய சோழர்களது சிற்பக் கலைக்கு சிறந்த சான்றாக விளங்குகிறது. திருவேதிக்குடியிலிருந்து சேகரிக்கப்பட்ட இச்சிற்பம் அவ்வூர் சிவாலயத்தில் தேவ கோட்டத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும்.

திருவலஞ்சுழி சேத்திரபாலர்

உயரம் 163 செ.மீ. அகலம் 70 செ.மீ.
திருவலஞ்சுழி, தஞ்சை மாவட்டம்

இச்சிற்பம் சிவன்கோயில் தென்கிழக்கு மூலையிலுள்ள சேத்திரபால தேவர் கோயிலிலுள்ள கருவறையிலிருந்துகொண்டு வரப்பட்டது. இது முகத்தில் புன்னகை தவழ எழிலுருவாய் எண் தோள்களில் ஆயுதம் தாங்கி எடுப்பான தோற்றத்துடன் நின்ற நிலையில் காணப்படுகிறது. வலது கைகளில் கீழிருந்து மேலாக முறையே மணி, உடுக்கை, வில் ஆகிய ஆயுதங்களைப் பற்றியுள்ளன. இடது முன்கை ஒன்று உடைந்துள்ளது. இக்கை கபாலம் பற்றிய நிலையில் இருந்திருக்க வேண்டும். தலையின் பின்புறம் விரிந்த சுடர் முடி வனப்பூட்டுகிறது. இம்முடியின் மேல் இடப்புறம் பிறை காட்டப்பட்டுள்ளது. முடி நடுவே கபாலம் ஒன்றும், அதன்கீழ் ஆடும் அரவங்கள் இரண்டு இணைந்து, பக்கங்கள் காட்டப்பட்டும் விளங்குகிறது. நெற்றியைச் சுற்றிலும் வட்ட வடிவமான நெற்றிப்பட்டம் வனப்பூட்டுகிறது.

நீண்ட வலது காதில் மகரக்குழையும், இடது காதில் வட்ட மான தகட்டுக்குழையும் அலங்கரிக்கின்றன. தோள்களில் தோள்மாலை சரிந்துள்ளது. கழுத்தைச் சுற்றிலும் மெல்லிய கண்டியும், நீண்ட முத்தாரம் ஒன்றும் அணி செய்கின்றன.

கழுத்தணியின் குஞ்சம் வலது தோளின் முன்புறம் வனப்புடன் வீழ்ந்துள்ளது. மேற்கைகளில் உரக கங்கணங்கள் காட்டப்பட்டுள்ளன. இடது தோளிலிருந்து வலது கீழ்த் தொடை வரை கபால மாலை அலங்கரிக்கின்றது. உடைமணி மாலை,அழகிய மலர்ச்சரத்தை ஒத்து அடுக்கடுக்காக அமைந்து காணப்படுகிறது.

வட்டவடிவமான முகமும், நெளிந்த புருவமும், கீழ்நோக்கிச் செல்லும் ஒளிமிக்க பார்வையின் வீச்சும், எடுப்பான நாசியும், பிரிந்த உதடுகளில் தவழும் புன்னகையும், இதழ்களின் ஓரங்களில் வெளிப்பட்டுள்ள சிறிய கோரைப் பற்களும் சேத்திரபாலரின் முகப்பொலிவை மிகவும் மென்மையாக வெளிப்படுத்துகிறது.

இவ்வுருவத்தின் நிற்கும் நிலை, நீண்ட உடல்வாகு, படர்ந்த சுடர்முடி, புன்னகை சிந்தும் முகப்பொலிவு, பிரிந்த தோள், அகன்ற மார்பு, குறுகிய இடை, வலிமையான அங்கங்கள், ஆடையற்ற திருவுருவாய் நிற்கும் எழிற்கோலம் யாவும் சிற்ப அளவுகளுக்கேற்ப முறையாக வடிக்கப்பட்டுள்ளது.

பன்றி முகத்தாள் (வராகி)

உயரம் 78 செ.மீ. அகலம் 44 செ.மீ.

சோழபுரம், தஞ்சாவூர் மாவட்டம்

பன்றியின் முகமும், மானிட உடலும் கொண்டு விளங்குவது இவ்வுருவம். ஏனத்தின் உருவில் இயற்கையாகச் செதுக்கப்பட்டுள்ள முகம் மிகவும் பொலிவோடு விளங்குகிறது. சோழபுரம் சிவன் கோயிலுக்குரிய பரிவார ஆலயக் கன்னியர்

எழுவருள் ஒருத்தியாக இவ்வுரும் கருதப்படுகிறது. காலம் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு சோழர் கலை.

திருமால்

உயரம் 2.6 மீ. அகலம் 1.5 மீ

இளையபெருமாள் நல்லூர், பெரம்பலூர் மாவட்டம்

சதுரமான பீடத்தின் மீது நேராக நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காணப்படுகின்றது. திருமாலின் மேற்கைகள் இரண்டும் கத்தரி முத்திரையில், ஆழியும் சங்கத்தையும் பற்றியுள்ளன. கீழ்வலக்கை முழங்கை வரை சிதைந்துள்ளது. இது அபய முத்திரையைக் காட்டும் கரமாக இருந்திருக்க வேண்டும். கீழ் இடக்கரம் தாழ்கரமாக நீண்டு தொடைமீது ஊருமுத்திரையில் அமைந்துள்ளது. செங்குத்தான நீண்ட கிரீட மகுடம் தலையை அலங்கரிக்கிறது. தலையின் பின்புறம் சிரச் சக்கரம் உள்ளது. நெற்றியைச் சுற்றிலும் பட்டம் அணி செய்கிறது.

நீள் செவிகளில் மகர குண்டலங்கள் வனப்பூட்டுகின்றன. தோள்மீது தோள் மாலை சரிந்துள்ளது. கழுத்தின் கண்டசரம் கற்கள் பதித்த மணிவடம் பட்டையாக அமைந்து அழகு செய்கிறது. இடது தோளிலிருந்து கீழ் வயிறுவரை முத்துக்கள் கோத்த புரிநூல் ஏறுகிறது. மேல் வயிற்றைச் சுற்றிலும் வயிற்றுக் கச்சை காட்டப்பட்டுள்ளது. மேற்கைகளில் தோள் வளையங்கள் அழகு செய்கின்றன. முழங்கையில் கடகமும் முன்கைகளில் மூன்று வளையங்களும் வனப்பூட்டுகின்றன. இடுப்பிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை கீர்த்தி முகப்புடைய கச்சை காணப் படுகிறது. இடையிலிருந்து பீடம் வரை ஆடைக்கட்டு சரிந்து நிற்கிறது.

சதுரமான பரந்த முகம், விரிந்த நெற்றி, வில் போன்ற புருவம், மலர்ந்த கண்கள், எடுப்பான மூக்கு, சற்று முறுவலிக்கும் திருவாய், நீள் செவிகள், அகன்ற தோள், விரிந்த மார்பு, நெடிய உடல்வாகு, நீண்ட அங்கங்கள் யாவும் கொண்டு இதனை விஜயநகர கால சிற்ப வடிவமாகக் கருதலாம். காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. இளையபெருமாள் கோயிலில் சேகரிக்கப்பட்ட இச்சிற்ப வடிவம் அவ்வூரைச் சார்ந்த விண்ணகரத்தின் மூலதெய்வமாக இருந்திருத்தல் வேண்டும்.

வடவாயில் செல்வி

உயரம் 88 செ.மீ. அகலம் 56 செ.மீ.

பழையாறை, தஞ்சாவூர் மாவட்டம்

இவ்வுருவம் நீண்ட செவ்வக வடிவான பீடத்தின் மீது வலது காலைக் குத்திட்டு ஊன்றி இடது காலைப் பீடத்தின் கீழ் குறுக்கே தொங்கவிட்டு எண்கரங்களில் ஆயுதம் தாங்கி முகத்தில் வீரச்சுவை பொலிய விளங்குகிறது.

சதுரமான பருத்த முகமும், விரிந்த நுதலும், தூக்கிய புருவமும், புடைத்த நாசியும், வீரப்பார்வையும், தடித்த உதடுகளின் பக்கங்களில் நீண்டுள்ள கடைவாய்ப் பற்களும் இவ்வுருவத்தின் உணர்வுகளை நன்கு வெளிப்படுத்தும் கருவியாக அமைந்து விளங்குகிறது.

கொடிய ஆயுதங்கள் பற்றிய எண்தோள்களின் வேகம் சிற்பத்தின் ஒவ்வொரு அசைவிலும் காணப்படுகிறது. தேவி இருக்கையில் வீறு கொண்டு அமர்ந்துள்ள நிலையும், வலுவான அங்கங்களின் அமைப்பும், வீரம் செறிந்த முகப் பொலிவும், எடுப்பான தோற்றமும், ஆடை அணிகலன்கள், ஆயுதங்கள்

ஆகிய அமைப்புகளைக் கொண்டு இதனை முற்காலச் சோழர் கலைப் படைப்பாகக் கருதலாம். வழக்கமாக தேவியின் இடது காலின் கீழ்க் காட்டப்படும் அசுரனின் உருவம் இங்கு காணப்படவில்லை. வனப்பும், வரலாறும் மிக்க இவ்வுருவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழ மன்னர்களின் இரண்டாம் தலைநகரான பழையாறையிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சோழ வேந்தர்களின் வெற்றித் தெய்வமாகவும், பழையாறை மக்களின் பெருந்தெய்வமாகவும் விளங்கியிருக்க வேண்டும். இவ்வுருவம் தஞ்சையில் விசயாலயன் எடுத்த நிசும்பசூதனியின் வகையைச் சார்ந்தது. பழுவேட்டரையர் எடுப்பித்த காளியின் சிற்பத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது.

பைரவர்

உயரம் 108 செ.மீ. அகலம் 45 செ.மீ.
கோயில் தேவராயன்பேட்டை

சதுரமான பீடத்தின் மீது இவ்வுருவம் இரண்டு கால்களை ஊன்றி நான்கு கைகளுடன் நேராக நின்ற திருக்கோலம். மேல் வலக்கை உடுக்கையை செங்குத்தாக பிடித்துள்ளது. மேல் இடக்கை நாகபாசம் சுற்றிய உடுக்கையை செங்குத்தாக பிடித்துள்ளது. கபால கிண்ணத்தை பக்கவாட்டில் ஏந்தி உள்ளது. கீழ் இடக்கை தொடை மீது ஊரு முத்திரையில் அமைந்துள்ளது. கரத்தைச் சுற்றிலும் ஆடும் நாகம் ஒன்று சுற்றி நிற்கிறது. கீழ் வலக்கரம், திரிசூலம் அல்லது கத்தியை ஏந்தி இருக்க வேண்டும். கரத்தின் முன் பகுதி சிதைந்துள்ளது. கரத்தின் பக்கவாட்டில் ஆடும் நாகம் ஒன்று காட்டப்பட்டுள்ளது.

மேல் நெற்றியைச் சுற்றிலும் அரவம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. தலையில் விரிந்த ஜடாபாரம்

அலங்கரிக்கிறது. தலையின் உச்சியில் மண்டை ஓடும் இடப்புறம் சந்திரனும் காட்டப்பட்டுள்ளது. வலது காது அணியின்றி நீள் செவியாக உள்ளது. இடது காதில் வட்டக்குழை அலங்கரிக்கிறது. கழுத்தில் கண்டசரமும் கற்கள் பதித்த அணியும் இடது மார்பில் கபால மாலையும்,இடையைச் சுற்றிலும் நாக அரைஞாணும் காலில் கழலும் பாதசாரமும் அலங்கரிக்கிறது. வலது காலில் காப்பும் மேற்கைகளில் அனந்தவளையும் அலங்கரிக்கிறது. நீள் சதுர முகம், வளைந்த புருவம். பருத்த விழிகள், புடைத்த நாசி, திறந்த வாய், நீண்ட உடல்வாகு, யாவும் சிற்பத்தில் காணத்தக்கது. கரிய நிறக்கல்லில் இவ்வுருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் தலை, முன் கைகள், மேற்கைகள், இடுப்பு ஆகிய அங்கங்களில் ஐந்து நாகங்கள் அலங்கரிக்கின்றன.

இதன் உருவ அமைதி, தலைக்கோலம், முகப்பொலிவு, அணிகள் யாவும் கொண்டு இது 10-ஆம் நூற்றாண்டு முற்பகுதியைச் சேர்ந்த சிற்பமாகக் கருதலாம். பாசக்கயிற்றைக் பற்றும் மேல் இடக்கரம் இங்கு கபால கிண்ணத்தை ஏந்தி யுள்ளதும், இடக்கரம் தொடைமீது அமர்ந்துள்ளதும் சிறப்பு அம்சமாக கருதலாம். தேவராயன்பேட்டையில் இருந்த சிவாலயத்தின் பரிவாரத் தெய்வமாக இருத்தல் வேண்டும்.

வலம்புரி விநாயகர்

உயரம் 69 செ.மீ. அகலம் 43 செ.மீ.

திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர் மாவட்டம்

இவ்வுருவம் வலது காலைக் குத்திட்டு, இடது காலை பீடத்தில் மடித்த வண்ணம் அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது.

மேல் வலக்கை உருண்டையான பொருளை ஏந்தியுள்ளது. கீழ்வலக்கை மோதக உருண்டையைப் பற்றியுள்ளது. கீழ் இடக்கை இடது காலைப் பற்றிய நிலையில் உள்ளது. கூர்மையான கரண்ட மகுடம் விநாயகரின் தலையை அலங்கரிக்கிறது. பக்கங்களில் விரிந்த காதுகள், வேழமுகம், மேல் வயிறு வரை நீண்டு வளைந்த வலம்புரி துதிக்கை, கூர்மையான கண்கள், குட்டையான அங்கங்கள், பெருத்து சரிந்த வயிறு யாவும் சிற்பத்தில் காணத்தக்கது. கழுத்தில் தடித்த அணியும், மார்பில் பூநூலும், வயிற்றைச் சுற்றிலும் உதரகச்சையும், மேற்கைகளில் மூன்று தோள் வளையங்களும், முன்கையில் காப்பும், இடையிலிருந்து தொடை வரை ஆடையும் விநாயகரை அலங்கரிக்கிறது. இளமஞ்சள் நிறக்கல்லில் செதுக்கப்பட்டுள்ள இவ்வுருவம் திருப்பூந்துருத்தி யிலிருந்து கொண்டு வரப்பட்டது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. முற்காலச்சோழர் கலை.

உமை தழுவிய சடைமுடி அண்ணல்

உயரம் 131 செ.மீ. அகலம் 76 செ.மீ.
கோபுரப்பட்டி, திருச்சி மாவட்டம்

நான்கு கைகளும், மேலிரு கைகளில் மழுவும், மானும் தாங்கி, கீழ் வலக்கையைத் தொடையில் அமர்த்தி, இடது கையால் உமையன்னையைத் தழுவி நிற்கும் நிலையில் சடைமுடி அண்ணலின் உருவம் காணப்படுகிறது.

அருகில் தேவி அழகே உருவாகக் காட்டப்பட்டுள்ளாள். அவளது வலது கை மலரைப் பிடிக்கும் முத்திரையிலும், இடது கை தாழ் கையாக எழிலாகத் தொங்கியும் காணப்படுகின்றன. அண்ணலின் அணைப்பிலே தன்னை மறந்து அழகிய சிலையாக நிற்கிறாள்.

திரிபங்கத்தில் நிற்கும் உமையின் உடல் அமைப்பு, கவிழ்ந்து ஒடுங்கிய முகப்பொலிவு, மெய்மறந்து மூடிய அரைக் கண்கள், அழகிய நாசி, தெய்வீகம் தவழும் மென்மையான உதடுகள் யாவும் நீள்முடி அண்ணலின் பேரழகுக்கு அழகு செய்கின்றன.

கல்லிருக்கும் இடமெல்லாம் கலைகளாக்கிக் கடவுள்தம் திருவுருவைப் படைத்த தமிழ் மன்னர்களின் புகழ்படைத்த சிற்பங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது பல்லவர் கலையிலிருந்து சோழர் கலை தொடங்கிய மாறுதல் காலத்திற்குரிய அரிய சிற்பமாகும். இதன் காலம் கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டு.

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகச் சேகரிப்பிலிருந்த இவ்வுருவம் 1982-இல் லண்டனில் நடந்த கலைவிழாவில் இடம் பெற்றுத் திரும்பிய புகழ்படைத்த சிற்பமாகும்.

14. மரச்சிற்பங்கள்

கோயில்களில் வடிக்கப்படும் சிற்பங்களுக்கு ஒப்ப தேர்களில் மரச்சிற்பங்களைச் செதுக்கி அழகுபட அமைக்கும் வழக்கம் பிற்காலங்களில் இருந்துள்ளது. இங்கு செந்தலையில் இருந்து சேகரிக்கப்பட்ட மரச்சிற்பங்களில் கலைநயம்மிக்க வீணாதரர், இறைவனை வழிபடும் மன்னன், அவருடன் அடியார்கள் ஆகிய அழகான உருவங்கள் இவற்றுடன் சிவனின் பல வடிவங்களான உமையொரு பாகன், சந்திரசேகரர் போன்ற சிற்பங்களும், வைணவச் சிற்பங்களாகத் திருமால், அவர் சிவனை வழிபடுதல், லெட்சுமி நாராயணர், சங்கர நாராயணன், நரசிம்மமூர்த்தி என விஷ்ணுவின் அவதாரங்களை சித்தரிக்கும் மரச்சிற்பங்களும் தேரின் ஒரு பகுதியில் அமைக்கப் பட்டிருக்கின்றன.

இவை மட்டுமின்றி பெண் தெய்வங்களும், அருள் பாலிக்கும் அன்னையும், அபயமளிக்கும் பெண் தெய்வமும், அல்லிமலர் ஏந்திய பெண்கள், சாமரை தாரணிகள், பூதகணங்கள், துவாரபாலகர்கள் இவற்றுடன் எமன், சித்ரகுப்தன் என்று தேவலோகத்தையே கண்முன் காட்டப்பட்டுள்ளது.

சூரியன், சந்திரன், மன்மதன், துவாரபாலகர்கள், குதிரை வீரன், பாயும் சிம்மம், ஒரு தலையும் இரு உடலும் கொண்ட மயில், யாளி, யானை, பூதவரிகள் மற்றும் எமன் ஆகிய மரச்சிற்பங்களும் தேருக்கு அழகூட்டுபவையாகக் காணப்படு கின்றன.

இவ்வாறு மரத்தால் கலைநயம் மிக்க சிற்பங்களைச் செதுக்கி அவற்றை ஊர்மக்கள் அனைவரும் கண்டு மகிழவும், அதன்

கருத்தை அறியவும் இந்த மரச்சிற்பங்கள் இங்கு கொணரப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை நம் கலைஞர்கள் கலைத்திறனை கல்லில் மட்டுமின்றி மரத்திலும் தழைத்தோடச் செய்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மரச்சிற்பங்கள் அனைத்தும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு தேரின் உதிரிச் சிற்பங்களாகும்.

முடிவுரை

சோழ மன்னர்களின் ஆட்சித் திறன், இலக்கிய வளர்ச்சி, அரசியல் அமைப்பு, தேர்தல் முறைகள், வரிகள், அதனை வசூலிக்கும் வாரியங்கள், அதற்குரிய வாரியத் தலைவர்கள், அவர்களின் பண்பு நலன்கள் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். அத்தகு சிறப்பு மிக்க சோழராட்சி முறையில், அவர்கள் எழுப்பிய கோயில்களும், அங்கு காணப்படும் கட்டிடக் கலையின் சிறப்பும், சிற்ப அமைதியும், ஒப்பிலா வடிவை பெற்றவையாகத் தோன்றுகின்றன. ஓவியங்கள்; ஓவியங்களில் காணப்படும் காவியங்கள், இதிகாசங்கள் என அனைத்திலும் சோழர் தம் முத்திரையைப் பதித்தனர்.

அத்தகு சோழ வரலாற்றை **"இராசராசன் அகழ்வைப்பகம்"** என்ற இந்த கையேட்டின்மூலம் தங்கள் கைகளில் தவழச் செய்துள்ளோம். படித்து இன்புறுவீர்கள் என நம்புகிறோம். அதில் கூறப்பட்ட கருத்துக்களில் ஒன்றி, சோழர்கள் சாதனை படைத்த நம் முன்னோர்கள் என பெருமைப்பட்டுக் கொள்வீர்கள். வாழ்க தமிழ். வளர்க அவர்தம் புகழ். வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழும் இராசராசன் அகழ்வைப்பகம் சிறந்த வரலாற்றுக் கூடமாகத் திகழ்ந்து வருவதை நீங்களும் கண்டுகளிப்பீர்களாக!

தஞ்சாவூர், இராசராசன் அகழ்வைப்பகத்திற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் வருகை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்ற தஞ்சாவூர், இராசராசன் அகழ்வைப்பகத்திற்கு தமிழகப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் 24-09-2007 அன்று வருகை புரிந்தார்கள்.

அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த சோழர்காலச் சிற்பங்கள், நாணயங்கள் மற்றும் விளக்குகளைப் பற்றியும் விரிவாகக் கேட்டறிந்தார்கள். இவ்வகழ்வைப்பகத்திலுள்ள தஞ்சைப் பெரிய கோயிலின் மாதிரித் தோற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள். அகழ் வைப்பகத்தைச் செம்மைப்படுத்தப் பெரிய அளவு ஓவியங்கள் மற்றும் கல்வெட்டுகளை வைத்துப் பார்வையாளர்களுக்கு அரிய செய்திகளைக் கொடுக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், 'இராசராசன் அகழ்வைப்பகம் அருமையாகப் போற்றப்பட்டு வருகின்றது. இதனை பொலிவூட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டால் சிறப்பான வகையில் பயன்தரும்' என்றும் பாராட்டி ஆலோசனையையும் பார்வையாளர் பதிவேட்டில் தனது கருத்தினையும் பதிவு செய்துள்ளார்கள். அதுசமயம் தஞ்சை தொல்லியல் அலுவலர் திரு.ச.செல்வராஜ், இராசராசன் அகழ்வைப்பகக் காப்பாட்சியர் திரு.கோ. அர்ச்சுனன் ஆகியோர் உடனிருந்து விளக்கம் அளித்தனர்.

அவ்வமயம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையாளர்கள் பதிவேட்டில் பதிவு செய்த பதிவுகள்





கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் - திருவிடைமருதூர்

சோழர் கால காசுகளும், உண்டியலும்

228750



சிலம்புகள்



"இளமையாக்கினார்" - எழுத்துப் பொறிப்பு உள்ள விளக்கு



12 முகம் கொண்ட சுடுமண் விளக்கு



தந்தப் பொருட்கள் - கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வு



சுடுமண் விளக்குகள் மற்றும் பானை ஓடுகள் -
பழையாறை அகழாய்வு

சோழர் கால பிள்ளையார் சிற்பம் - கோயில்
தேவராயன் பேட்டை

சேத்ரபாலர் - இராஜராஜன் காலம் - திருவலஞ்சுழி

அர்த்தநாரீசுவரர் சிற்பம் - சோழர்காலம்
வீராக்கன், தஞ்சாவூர் மாவட்டம்



தேர் மரச் சிற்பங்கள் - செந்தலை



தேர் மரச் சிற்பங்கள் - செந்தலை

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்